நன்றி - நூலகத்திட்டம்

இதழ்-4 நவம்பர் '90 விலை 5/-

# சரிநிகர்

Registered as a Newspaper in SriLanka.

உள்ளே:

- புதிய நடைமுறை தேவை...
- கோட்டை மான்மியம்...
- சண்' எழுவது...
- 3 புதிய கவர்னர்கள்...



# அடுத்தது என்ன?





வேத்தடி வாழ்வு!



முஸ்லிம்களற்ற ஈழம்?

அடுத்த இதழில்:
மலையக மக்களுக்கு ஒரு
தனி மாகாணம் தேவையா?
— கருத்தாடல்

நன்றி - நூலகத்திட்டம்




# மெல்லத் தமிழினி.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தின் கொடுமையால் பெருந் தொகையான மக்கள் கொழும்பு நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருவதற்கு "பாஸ்" எடுப்பதிலுள்ள சிரமம் காரணமாகவும் போக்குவரத்து வசதியீனம் காரணமாகவும் அங்கிருந்து இங்கு வரும் தொகை குறைவாக இருந்தது. ஆயினும் கடந்த ஒக்டோபர் 9ம் 10ம் திகதிகளில் புலிகளால் வழங்கப்பட்ட கட்டுப்பாடற்ற அனுமதியினால் வவுனியாவில், பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குவிந்தனர். தங்குமிட வசதியோ பிற வசதிகளோ அற்ற ஒரு இடத்தில் கால் கடுக்க சுடு வெயிலில் குழந்தைகளும் தாய்மார்களுமாக 3,4 நாட்களாக நின்ற மக்கள் முண்டியடித்துக் கொண்டு கஷ்டப்பட்டு கொழும்பு வந்து சேர்ந்த போது இலங்கை வானொலியில் ஒலிபரப்பான அரச அறிவிப்பு இது .. " யாழ்ப்பாணத்திலிருந்து வந்து சேரும் யாருக்கும் தங்க இடவசதிகளை எந்த விடுதிகளும் வழங்கக் கூடாது. தனிப்பட்ட உறவினர்கள் வீடுகளில் தங்குபவர்களின் பெயர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கையளிக்கப்பட வேண்டும்.

யாழ் நகர் பூராகவே குண்டு மாரி பொழிந்து அழித்து விட்ட அரசாங்கம், வடக்கில் புலிகளால் மக்கள் கொடுமைப் படுத்தப்படுகிறார்கள் என அறிவிக்கிற அரசாங்கம், அங்கு வாழ முடியாமல் தப்பித்து வருபவர்களுக்கு தங்குமிடம் வழங்குவதற்கு இவ்வளவு கட்டுப்பாடுகள் விதிப்பதன் மூலம் என்னதான் செய்ய விரும்புகிறது? ஒரு வேளை இதுதான் அரசாங்கத்தின் "வடக்கு கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் " வழி முறையோ? ஆனால், எவ்வளவு ஆழத்துக்கு அமிழ்த்தப்படுகிறதோ அவ்வளவு வேகமாக நீரைக் கிழித்துக் கொண்டு பந்து மேலே வரும் என்பது இயற்கை நியதி ! .

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த பிறகு, அங்கு தோன்றியுள்ள யுத்தச் சூழலால் அல்லலுற்று இலங்கை நோக்கி திரும்பும் நோக்குடன் ஆயிரக்கணக்கான இலங்கையர் சவூதிக்கு வந்துள்ளனர். அங்கேயிருந்து வந்து சேர்ந்தவர்களின் தகவலின்படி, தூதரகத்தில் தமிழ் தொழிலாளர்களது இலங்கை வருகைக்கான வசதி வழங்கலில் பாரபட்சம் காட்டப்பட்டதாகவும், அதிகளவு பணம் வசூல் செய்யப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இதனால் பொறுமையிழந்த சிலர் தூதரகத்தின் ஒரு பகுதிஂயை முற்றாக தரைமட்டமாக்கி விட்டார்களாம். இந்த குவைத் மீண்டவர்கள் தெரிவித்த இன்னொரு தகவலின்படி, ஈராக்கிய படைகள் குவைத்தை ஆக்கிரமித்த வேளையில் சில தமிழ் இளைஞர்கள், குவைத்திய வங்கியொன்றில் புகுந்து அங்கிருந்து தங்கக் கட்டிகளைக் கொள்ளையிட முயன்றதாகவும், முயற்சியின் போது ஈராக்கிய இராணுவத்தின் துப்பாக்கி சூட்டினால் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இன்னுமொரு தகவலின்படி குவைத் சவூதி பயணத்திற்கென ஈழம் போக்குவரத்து சேவையொன்றை அவர்கள் நடாத்துவதாகவும் இதை எதிர்த்த தூதரக அதிகாரிகள் தாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத் தொடக்கத்தின் பின் இப்போது உலகமெல்லாம் நிறைந்துள்ள இலங்கை தமிழர்களின் தொகை பெருமளவில் அதிகரித்து விட்டது. போதை வஸ்து கடத்தல் முதல், நாடு பிடிக்கிற விசயம் வரை அனைத்து துறைகளிலும் "தமிழனின் " பெருமை கொடிகட்டிப் பறக்கிறது. எல்லா நாடுகளிலும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் ஆட்கடத்தல், கப்பம், அடிதடி என்று மிகவும் தாராளமாகவே நடக்கிறது.

திம்பு மாநாட்டில் இலங்கை அரசிடம் முன்வைத்த நான்கு கோரிக்கைகளில் ஒன்று வட, கிழக்கு தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என அங்கீகரிக்க வேண்டும் என்பது. ஆனால் இலங்கை அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் என்ன? முழு உலக நாடுகளும் "பொதுவான அதன் குணம்" காரணமாக அதை ஒரு தேசிய இனம் என விரைவில் அறிவிக்கும் என நாம் நம்பலாம். ஆனால் இந்த இனத்திற்கு ஒரு தனி நாட்டை வழங்கினால் அது ஒரு நாடாக இருக்குமா என்பதில் சில வேளை அவர்கள் வேறுபடக் கூடும்.



மனிதம் மரணித்த மயானம்
நான் நடந்து கொண்டிருந்தேன்
எங்கு தொடங்கினேன் என
நான் அறியேன்
எங்கு முடியும் எனவும்
நான் அறியேன்
எம்மவரைப் போல்.

ஓரத்தில் கிடந்த எலும்பு.
ஆணுடையதா?
பெண்ணுடையதா?
அவர்கள் எவற்றால் கொல்லப்பட்டனர்
எதையும் நான் அறியேன்

புற்களில்
கருகிய தரைகளின் மேல்
ச ருக்கள் எரிக்கப்பட்ட
கருப்பைகளின் மேல்
ஒரு மூலையில்
சுதந்திரம்பாடியதற்காய்
திருகப்பட்ட குரல்வளைகளின் மேல்
உறைந்து போன
இரத்த ஆற்றின் மேல்
நடந்து கொண்டிருக்கிறேன்.

சூரியன் வரா நிலத்திற்கு
சூனியப் பிரதேசத்திற்கு
இருள் நீங்கா இடத்திற்கு
நடந்து செல்கிறேன்
ஆத்மா இல்லாத அழுகிய உடலுடன்

எங்கிருந்தோ அழுகுரல்
உயிர்ப்பின் அடையாளம்
நிலம் இறுக்கியது காலை.
நடை தடைப்பட்டது.

தூரத்தில்
மூன்று குழந்தைகள்
கருகிய நிலங்களிலும்
எரிக்கப்பட்ட கருப்பைகளிலும்
பிறந்தவர்கள்
ஆத்மாவுடன் அறிமுகமானவர்கள்
அடிபணிய மறுப்பவர்கள்
தூரத்தில் தெரியும் புள்ளி போலத்தான்
எனினும்
சுதந்திர கீதம் மீண்டும் முழங்கும்

இறந்தவை பிறந்தன
பிழைகளைத் திருத்தின
போர் முரசு
மீண்டும் ஒரு முறை முழங்கும்
புதியதாய்.
மேற்கில்.

– அக்கினிக் குஞ்சு

# வாசகர் சொ(ா)ல்வழி!

வாசகர் "சொல் வழி"கள் வரவேற்கப் படுகின்றன: முகவரி- ஆசிரியர், சரிநிகர், 6, அலோ சாலை கொழும்பு-3

## வரலாற்றுத் தவறுகள் !

'மோர்ஜ்' வெளியிடும் பத்திரிகைக்கு சந்தா பெற்றுத்தான் அவர்கள் தமது பத்திரிகையைச் சமாளிக்க வேண்டும் என்பதில்லை. அவர்கள் தங்களுக்கு மேலுள்ளவர்கள் பிடித்திருக்கும் stringஇன் உள் ஆடினால் நிதி தன்பாட்டிலேயே flow பண்ணும்.

ஆனால் அரசாங்கத்தின் கோட்டைக்குள்ளேயே (கொழும்பு) இருந்து கொண்டு Critical ஆக வரும் ஒரு தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தாதாரராக இருப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

சரிநிகர் பத்திரிகையில் தென்னாபிரிக்கக் கட்டுரையில் factual mistakes இருக்கின்றன. அவற்றைத் தவிர்த்துக் கட்டுரையைப் பார்த்தாலும் வரிக்கு வரி விமர்சனத்திற்கே எடுக்க முடியாத வரலாற்றுத் தவறுகள். ஏதோ ஒரு தனி மனிதன் மண்டேலாவைச் சுற்றித்தான் தேசிய விடுதலை இயக்கமே உருவாக்கப்பட்டுள்ளது. உலக வரலாற்றிலேயே ஒரு பண்பட்ட முறையிலேயே பிறந்து வளர்ந்து வரும் ஒரு மக்கள் புரட்சியை அவமதிக்க இதை விட வேறொரு கட்டுரையும் தேவையில்லை.

வி.கணபதிப்பிள்ளை,
விற்பாங்,
தென்னாபிரிக்கா.

## "அதென்னது கடமா?"

பத்திரிகையில் படங்களைப் பிரசுரிக்கும் போது ஏன்? எதற்காக? அதனூடாக என்ன சொல்லப்போகிறோம் என்கிற பிரக்ஞையுடன் படங்களைப் பிரசுரிப்பது நன்று. முதற்படம், பத்மநாபாவின் கோட்டு வரிப்படம் போன்றன தேவைக்கேற்ற விதத்திலன்றி படம் பிரசுரிக்க வேண்டுமென்பதற்காகப் பிரசுரித்தது போல் இருக்கிறது.

மற்றையது 'வீர சிங்கள செபலுண்ட ஜய வேவா' இதன் தமிழாக்கம் அக்கட்டுரையில் இல்லை. சிங்களம் தெரியாத தமிழ் வாசகர்களுக்கு இது எப்படி புரியும்?

அதேபோல் மு.கா. தவிசாளரின் கடமா என்று ஒரு கட்டுரைக்குத் தலைப்பிட்டிருக்கிறீர்கள். கட்டுரையில் ஒரு இடத்திலும் இதற்கான விளக்கம் குறிப்பிடப்படவில்லை. இது தவறான விளக்கங்களுக்கு இடமளிக்குமல்லவா?

இன்னுமொன்று: ஒரு சிங்கள நண்பரின் கடிதத்தைப் பிரசுரித்துள்ளீர்கள். அதன் தமிழாக்கம் இல்லாமல். எதற்காக? சிங்கள நண்பர்களும் எங்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதைக் காட்டவா?

"யுத்தத்தின் குழந்தை" - இதில் எழுதப்பட்டுள்ள விடயத்திற்கு இந்தத் தலைப்பு பொருத்தமற்றது என நினைக்கிறேன்.

எல்லாவற்றையும் விட சரிநிகர் பத்திரிகையின் இலக்கு என்ன? குறிக்கோள் என்ன? அது எப்படிப்பட்ட விடயங்களுக்கு, முக்கியத்துவம் கொடுக்கும். மக்களையும் சமூகத்தையும் மாற்றவேண்டுமென்றால் அது எப்படிப்பட்ட சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முயலப் போகிறது? அதற்கான உங்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கை என்ன? விளக்கமுடியுமா?

இறுதியாக, சரிநிகரின் பக்கங்களை அதிகரித்து கிழமைக்கு ஒன்றாக வெளியிட முடியாதா?

ஒருவாசகன்.
கொழும்பு-13.

# சொல்லாத சேதிகள்..

யாழ் கோட்டை நாற்றுவயில போது சுட்டுவீழ்த்தப்பட்ட விமானத்தை ஓட்டிய விமானி இறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்புதான் மணமானவர். அவரது மரணச் சடங்கு கொழும்பில் நடந்த போது அவரது இளம் மனைவி இவ்வாறு சொல்லிச் சொல்லிக் கண்ணீர் விட்டார். " ஒவ்வொரு குண்டு போடும் போதும் "சொறி" சொல்லிவிட்டு" போடுவதாக சொல்லீர்களே ... உங்களது விமானத்தையும் அவர்கள் "சொறி" சொல்லிவிட்டா சுட்டார்கள் ?

யாழ் ஆயர் அதி வண தியோகுப் பிள்ளையிடம் வெளிநாட்டு நிருபர் ஒருவர் ராஜினி திரணகமவின் படுகொலைக்கு யார் பொறுப்பு என்பது பற்றிய அவரது அபிப்பிராயம் என்ன என்று கேட்டிருந்தார்: ஆயரின் பதில் இது -

"எனக்கு ஒரு அபிப்பிராயமும் இல்லை. எந்த அபிப்பிராயமும் இல்லாமல் இருப்பதே நல்லது. நீங்கள் தேநீரை குடியுங்கள். ஆறி விடப் போகிறது"

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்து சேர்ந்த பயணிகள் மதவாச்சி வருவதற்கு உடனடியாக அனுமதிக் முடியாது என்று அறிவித்த ஸ்ரீலங்கா இராணுவ மேஜர் ஒருவருக்கு ஒரு பயணி கூறியது " ஐயா நாங்கள் உங்களை நம்பித்தான் புறப்பட்டு வந்திருக்கிறோம். நீங்கள் மறுத்தால் எங்களால் எதுவும் செய்ய முடியாது..... இங்கேயே சாக வேண்டியதுதான். "

"நாங்கள் 8 லட்சம் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு தான் கோட்டையை விட்டு வெளியேறுகிறோம். அவர்களுக்கு வசதியாக யாழ் வைத்திய சாலையை இயங்கவைப்பதற்காகவே ஆஸ்பத்திரி பிராந்தியத்தை யுத்தமற்ற பிராந்தியமாக அறிவிக்கவும் கோட்டையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை பாரமெடுக்கும் படியும் செய்தோம். புலிகள் அவர்களை அனுமதிக்காவிட்டால் நாங்கள் தான் தக்க நடவடிக்கை எடுப்போம்"- பத்திரிகையாளரிடம் ரஞ்சன்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஒருவர் தெரிவித்ததாக நாளேட்டில் பிரஜைகள் எழுதிய பத்திரியொன்றில் இப்படி ஒரு வாசகம் " அரசு எங்களை மக்களாகவே மதிப்பதில்லை. புலிகள் ஆகக் குறைந்தது எங்களை துரோகிகளாகவாவது மதிக்கிறார்கள். "

யாழ்ப்பாணத்தின் குண்டுத்தாக்குதல்களைப் பற்றிய பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சர் பதிலளித்த போது தெரிவித்தது " நாங்கள் ஒரு போதும் பாரபட்சமற்ற முறையில் தாக்குதல் நடாத்துவதில்லை" - no indiscriminate bombing.

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கை அகதிகள்



தனித் குண்டு வெடித் தலைகுனிந்து ஆவிவுக்கு இலங்கைத் இனவெறி அரசு தமிழ்மக்கள் மீது தாக்குதல் தொடுத்து வருகிறது. இனவெறி அரசின் மிருகத்தனமான தாக்குதலிருந்து உயிர்தப்பி, தமிழகம் ஓடி வரும் தமிழ் மக்களின் சோகம் முடிவுறவில்லை! தமிழகத்திலும் தொடர்கிறது. ஆம், தமிழினத் தலைவராக தன்னை மார் தட்டிக் கொள்ளும் கருணாநிதி இலங்கைத் தமிழ் அகதிகளை உளவாளிகளை வைத்து கண்காணிக்கிறார். சிறைக் கைதிகளைப் போலவே கொட்டடியில் அடைத்து அவமானப்படுத்துகிறார். இந்திய ஆட்சியாளர்களோ ஈவுஇரக்கமின்றி இலங்கை அகதிகளை மீண்டும் இலங்கை இனவெறி அரசிடமே திருப்பி அனுப்ப திட்டமிட்டு வருகிறார்கள். இலங்கையை மீண்டும் ஆக்கிரமிப்பதற்கு தொடர்ந்து சதி வேலைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### வெந்த புண்ணில் வேல பாய்ச்சும் போலீஸ் கும்பல

இலங்கை இனவெறி அரசிடமிருந்து தப்பித்து இந்தியக் கரைக்கு வந்துவிட்டால் இந்திய அரசு கவனித்துக் கொள்ளும் என்ற இலங்கைத் தமிழர்களின் நினைப்பு இந்தியக் கரையை வந்தடைந்ததும் பொய்த்துப் போய்விடுகிறது. இந்திய மண்ணில் காலடி எடுத்து வைக்கும் போதிலிருந்தே தமிழக அரசு இலங்கைத் தமிழ் மக்களை அவமானப்படுத்தத் துவங்கிவிடுகிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் பலர் இனவெறி அரசு தொடுக்கும் யுத்தத்தினால் தங்களின் உடமைகளை இழந்த நிலையில் தங்களிடமிருக்கும் சொற்ப உடமைகளை விற்று 600 ரூபாய் வரை செலவழித்து சிறு மோட்டார் படகுகளில் ஏறி ராமேஸ்வரம் கடற்கரையில் வந்து இறங்குகின்றனர். உடனே கடற்கரையில் அதிகாரிகள், உளவு நாய்களின் பெருங்கூட்டம். அவர்களை சுற்றி வளைத்துக் கொள்கிறது. தமிழக உளவுத் துறையினரான சிஅய்டி போலீஸ், 'கியூ' பிராஞ்ச், ஸ்பெஷல் பிராஞ்ச் பிரிவினர், இந்திய உளவு நாய்களான சி.பி.ஐ., ரா ஆகியோர் அடங்கிய பெருங்கும்பல் அகதிகளை பரிசோதனை என்ற பெயரில் கடுமையாகத் துன்புறுத்துகிறது. பின் இதிலிருந்து மீண்டால் எமிகிரேஷன் பிரிவினர், மாவட்ட ஆணையர், தாசில்தார் ஆகிய அதிகார வர்க்க வகையறாக்கள் தமிழ் மக்களை கேள்விகள் கேட்டுத் துளைத்து எடுக்கின்றனர். வந்திறங்கும் இலங்கைத் தமிழ் மக்களில் இளைஞர்களையும் போராளிகளையும் தனியே பிரித்து மீண்டும் சோதனைகள், பரிசோதனைகளை நடத்துகின்றனர். காயமடைந்து வரும் மக்களை தனியே பிரித்துச் சென்று சிகிச்சை என்ற பெயரில் ரகசியமான முறையில் அடக்குமுறைகளை தொடர்கின்றனர். சமீபத்தில் காயமடைந்து வந்த காசிம் என்ற 12 வயது சிறுவனை சந்திக்க முயன்ற பத்திரிகையாளர்களை போலீஸ் கும்பல் தடுத்து நிறுத்திவிட்டு அவனை எங்கோ ரகசிய விசாரணைக்கு அழைத்துச் சென்றது. இதுபோக அகதிகள் கொண்டுவரும் ஒளிப்பதிவு நாடா, வீடியோ கேசட்டுகளையும், நகைகளையும் போலீஸ் கும்பல் மிரட்டி பிடுங்கிக் கொள்கிறது.

இலங்கை இனவெறி அரசிடமிருந்து தப்பி ஓடிவரும் அகதிகள் சொல்லொணாத் துயரங்களுக்குள்ளாகி வருகின்றனர். தப்பி ஓடிவரும் அகதிகள் கிடைக்கும் படகுகளில் ஏறி வருகிறார்கள். அதனால் படகில் ஏறும் அவசரத்தில் ஒரே குடும்பத்தினர் பல படகுகளில் பிரிந்து ஏறுகின்றனர். இதனால் பலர் தங்கள் உறவினர்களை கடற் பயணத்திலேயே இழந்துவிடுவதும் உண்டு. இதை ராமேஸ்வரம் வந்து இறங்கிய பிறகே கண்டு பிடிக்கும் அகதிகள் அதிர்ச்சி அடைந்து கதறி அழுகின்றனர். இப்படி ராமேஸ்வரம் கடற்கரையில் பல துயரக் காட்சிகளை தினசரி காணலாம். சிவலிங்கம் என்பவர் தனது தங்கை ராஜேஸ்வரி இன்னொரு படகில் வந்திருப்பார் என்று நம்பி வந்தார். மற்ற படகில் தன் தங்கை இல்லை என்றறிந்ததும் அவர் மனம் உடைந்து கதறினார். இதைவிட இன்னொரு சோகமான சம்பவம் - தன் கணவர் இன்னொரு படகில் ஏறிவிட்டார் என்று நினைத்து ஒரு மகனுடன் புறப்பட்ட தாய் தன் கணவர் மற்றொரு படகில் இல்லை என்றதும், "அனாதையாக்கிவிட்டு போய் விட்டீர்களே" என்று கதறி அழுதார். இப்படிப்பட்ட துயரங்களை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழ் மக்களிடம் போலீஸ் கும்பல் ஈவு இரக்கமின்றி சோதனையிடுகிறது: வழிப்பறி செய்கிறது

### சிறைக் கொட்டடிகளாக அகதிகள் முகாம்

அகதி முகாம்களுக்குள்ளே அகதிகள் எப்படி நடத்தப்படுகின்றனர் என்பதை யாருமே கண்டறிய முடியாது. ஏனெனில் பத்திரிக்கை நிருபர்களோ, செய்தியாளர்களோ உள்ளே செல்வதற்கு அனுமதி கிடையாது. அகதிகள் முகாம்களின் நுழைவாயிலும் போலீஸ் கும்பல் குவிக்கப்பட்டுள்ளது. இதுபோக, முகாம்களின் நுழைவாயில்களுக்கு அருகில் மணல் மூட்டைகளை அடுக்கிக் கொண்டு ஏதோ போருக்கு தயாராகின்றது போல் ஏ.கே. 47 போன்ற நவீன துப்பாக்கிகளுடன் பீதியூட்டும் வண்ணம் போலீஸ் கும்பல் காத்து நிற்கிறது.

சிறைச்சாலைகளில் நடப்பது போலவே அகதி முகாம்களின் கதவுகள் மாலை 6 மணிக்கு அடைக்கப்படுகின்றன. தமிழ் அகதிகளுக்கு பேசுவதற்கோ, தமிழகத்தில் உள்ள உறவினர்களுக்குக் கடிதம் எழுதுவதற்கோ கூட உரிமைகள் கிடையாது. அகதிகள் முகாம்களில் வாசலில் நின்று பேசினாலே உடனே அவர்களை உளவுப்படையினர் சூழ்ந்துக் கொள்கின்றனர். எழுதப்படும் கடிதங்கள் கடுமையாக தணிக்கை செய்யப்படுகின்றன.

இதுவரை வந்த மொத்த அகதிகள் 30,000 பேர் என்று சொல்லி, 9,000 பேர்களுக்கு ஒரு முகாம் என்ற வீதத்தில், அடைத்து வைத்துள்ளது தமிழக அரசு. அகதிகளில் பெரும்பாலானோர் ஏழை மக்களே. முகாம்கள் அனைத்தும் இடிந்து விழக்கூடிய நிலையிலுள்ள பாழடைந்த கட்டிடங்களே. அங்கே கழிப்பறை வசதிகளோ, குடிநீர் வசதிகளோ இல்லை. இதனால் பெண்கள் படும் அவதிகள் சகிக்க முடியாது.

கூட்டுறவுக் கடைகளில் அரிசி மாதம் ஒருமுறை வழங்கப்படுகின்றது. எப்போது வழங்கப்படும் என்பதற்கு நேரமெல்லாம் கிடையாது. அடுத்த நாள் காலை 10 மணிக்கு வழங்கப்படும் 30 கிலோ அரிசிக்கு முன்னிரவு 12 மணிக்கு கியூவில் இடம் பிடிக்க வேண்டும். 30 கிலோ அரிசியில் அதிகாரிகள் சுருட்டிக் கொண்டது போக 25 கிலோ அரிசிதான் குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. மற்ற அத்தியாவசியப் பொருட்கள் பற்றி பேச்சே கிடையாது. பல பச்சிளங் குழந்தைகள் பாலுக்காக அழுவதும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பால் கிடைக்காத நிலையைக் கண்டு கதறுவதும் அனைத்து முகாம்களிலும் காணப்படுகின்ற சகஜமான காட்சிகள்

அடிப்படை உணவுப் பொருட்களே கிடைக்காதபோது, மருத்துவ சிகிச்சை பற்றி நினைத்துப் பார்க்க முடியுமா? நோயாளிகளும், தீப்புண்களுடன் கூடிய அகதிகளும் வெறுந்தரையில் படுக்க வைக்கப்பட்டுள்ளனர். இதில் கர்ப்பிணிப் பெண்கள் படும் துன்பங்கள் சொல்லி மாளாது. முகாம்களில் இத்தனை அவலங்கள் இருப்பினும், தொந்தி பெருத்து திரியும் அதிகாரிகளுக்கு அகதிகள் கொண்டுவரும் நகைகளே குறி. சில நகைகள் கொடுத்தால்தான் அவர்கள் சிகிச்சையோ, பாலோ தொடர்ந்து கொடுக்கிறார்கள்.

பல முகாம்களில் நோய் முற்றிய நிலையில் சிகிச்சை அளிக்கக் கோரி அகதிகள் அதிகாரிகளை எதிர்த்துக் கேட்டால் தான் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. அதுவும் சடங்குத்தனமாகவே செய்யப்படுகிறது. இப்படி அனைத்து வகையிலும் இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழக ஆட்சியாளர்களால் அவமானப்படுத்தப்பட்டு ஆடுமாடுகளைப் போல நடத்தப்படுகின்றனர்.

### இடைத்தரகர்களின் அட்டூழியம்

இலங்கையிலிருந்து வரும் அகதிகள், போலீஸ் கும்பல்களிலிருந்து தப்பிப்பதற்காக தனுஷ்கோடியிலேயே இறங்கிவிடுகின்றனர் ஆனால் அங்கே இறங்கியவுடன் புரோக்கர்கள் கூட்டம் அகதிகளை சூழ்ந்து கொள்கிறது. அகதிகளின் நிலையை பயன்படுத்தி கொண்டு அகதிகள் கொண்டுவரும் தட்டுமுட்டு சாமான்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிக் கொள்கிறது.

அகதிகளிடம் டேப் ரிகார்டர், வீடியோ டெக்குகள் இருந்தால் அவற்றை மிரட்டிப் பிடுங்கிக் கொள்கின்றது. தனுஷ்கோடியிலிருந்து ராமேஸ்வரத்திற்கு அடிக்கடி பஸ் வசதிகள் கிடையாது என்பதால் இலங்கைத் தமிழ் அகதிகள் பல மணிநேரம் பட்டினியுடன் காத்துக் கிடக்கின்றனர். இதில் குழந்தைகள் சுடுமணலை தாங்கிக் கொள்ள முடியாமல் வீறிட்டுக் கத்துகின்றனர். இதைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் கம்பெனிகள் வேன்களை கொண்டு வந்து நிறுத்தி அகதிகளிடம் அதிகமான வாடகை கேட்கின்றனர். கையில் பணமில்லாதவர்கள் வெறுங் காலுடன் சுடுமணலில் 20 மைல் நடந்தே ராமேஸ்வரம் வந்து சேருகின்றனர்

### 'பூமாலை நடவடிக்கை' ஆக்கிரமிப்பாளரின் சதிகள்

இலங்கை இனவெறி அரசின் கொடூரமான அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. நாளுக்கு நாள் இலங்கையிலிருந்து தப்பி ஓடிவரும் தமிழ் மக்களின் சோகக் கதைகள் நமது நெஞ்சைப் பிழிகின்றன. ஆனால் கல் நெஞ்சக்கார ஆக்கிரமிப்பாளர்களோ இலங்கைப் பிரச்சினையில் ஆதாயம் தேடுவதிலேயே குறியாய் இருக்கின்றனர். மீண்டும் இலங்கை மீது ஒரு ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுப்பதற்கான தமது சதிகளை விடாது தொடர்கின்றனர்.

'தனித்தமிழ் ஈழம் ஒன்றே தீர்வு' என்று இதுகாறும் தனது பிழைப்புக்காக வேடம் போட்டு வந்தார் கருணாநிதி. சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில் தனது பிழைப்புவாத முகமூடியையும் தூக்கி எறிந்து விட்டு தான் ஆக்கிரமிப்பாளர்களின் அடிவருடி என்பதை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டார். 'தனித்தமிழ் ஈழம்' கொள்கையைத் திணிக்க மாட்டோம். இலங்கைத் தமிழர்கள் நிலையான அமைதியுடன் வாழ எது சரியான அரசியல் தீர்வு என்று அவர்கள் கருதுகிறார்களோ அதை நாங்கள் ஆதரிப்போம். அதைவிட்டுவிட்டு நீங்கள் தனித் தமிழ் ஈழம் கேட்டுத்தான் தீரவேண்டும் என்று அவர்கள் மீது திணிக்க மாட்டோம். இதை கடந்த 5 ஆண்டுகளாக சொல்லி வருகிறேன்', என்று நாக் கூசாமல் புளுகினார். பின்னர் தொடர்ந்து 'தமிழ்மக்கள் உணர்வை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும் இலங்கை அரசு புரிந்துகொள்ள மறுத்தால் இலங்கைத் தமிழர்களை காப்பாற்ற அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கையை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

ஆக்கிரமிப்பாளர்களின் கைக்கூலியான கருணாநிதி மேலும் துணிச்சலாக, 'இலங்கைக்கு நமது விமானங்களை அனுப்பி இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு உணவுப் பொட்டலங்களை போடுவது பற்றி மத்திய அரசிடம் பேச வேண்டும். முந்தைய பூமாலை ஆபரேசன் என்ற முறையை போலவே, இப்போதும் பின்பற்றலாம்' என்று கூறினார். இதே குரலை துரோக கும்பலான டெலோ கும்பலும் எழுப்பியுள்ளது. 1987ம் ஆண்டில் 'பூமாலை நடவடிக்கை' என்ற பெயரில் இந்திய ஆக்கிரமிப்பு ராணுவம் உணவுப் பொட்டலங்கள் போடுவது என்ற சாக்கில் இலங்கையில் அத்துமீறி நுழைந்து இலங்கை அரசை மிரட்டியது. அதேபோல் மீண்டும் பூமாலை நடவடிக்கையை நடத்த ஆக்கிரமிப்பாளர்கள். தனது கைக்கூலிகளின் மூலம் பிரச்சாரத்தைத் துவங்கி விட்டார்கள் என்பதை எச்சரிக்கையுடன் பரிசீலிக்கவேண்டும்.

இப்படி கைக்கூலிகளான கருணாநிதி, டெலோ கும்பலின் மூலம் பூமாலை ஆப்பரேசனுக்கான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுக் கொண்டே இன்னொரு பக்கத்தில் ஆக்கிரமிப்பதற்கான எத்தனிப்புகளை மேற்கொண்டுள்ளனர் இந்திய ஆக்கிரமிப்பாளர்கள். இப்போது இந்தியாவின் இரண்டு போர்க்கப்பல்கள் இலங்கை கடற்கரையை ஒட்டி வட்டமிடுகின்றன. இப்போர்க் கப்பல்கள் ராணுவ டாங்கிகள், லாரிகள், ஜீப்புகளை ஏற்றப் பயன்படுத்தும் வகையைச் சார்ந்தவை. துறைமுக வசதியில்லாத பகுதியிலும் துருப்புகளை இறக்கக்கூடிய வசதி படைத்தவை.

அதே சமயத்தில் தமிழகம் வரும் அகதிகளை இலங்கை அரசிடம் காட்டிக் கொடுக்கத் தயங்காதவர்களாக இந்திய ஆட்சியாளர்கள் செயல்பட்டு வருகிறார்கள். 'இலங்கைத் தமிழருக்கு இந்தியாவில் அகதி முகாம்கள் அமைப்பதைவிட இலங்கையிலேயே அவர்களுக்கு அகதி முகாம்களை அமைக்கலாம். அகதி முகாம்களை சர்வதேச அமைப்பின் மூலம் மேற்பார்வை இடச் செய்யலாம்' என்று பிரதமர் வி.பி. சிங் கூறியுள்ளார்.

இப்படி இலங்கையிலிருந்து தமது வாழ்வைப் பறிகொடுத்துவிட்டு தமிழகத்தில் தஞ்சம் புகும் இலங்கைத் தமிழ் மக்களை ஆக்கிரமிப்பாளர்கள், சிறைக் கைதிகளைப் போலவே அவமானப்படுத்துகிறார்கள். இலங்கை இனவெறி அரசிடமே திருப்பி அனுப்பி அவர்களை பலிகொடுக்க ஆலோசித்தும் வருகிறார்கள். இதைத்தவிர ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. □

ஜூனி.வி. கேடயம் - ஆக 90.

---

இலங்கையின் ஈரண்டாவது சட்டசபையின் காலகட்டத்தில் தான் இனவாதம் தலைவிரித்து ஆடத் தொடங்கியது. தெற்கிலே திருவாளர் பண்டாரநாயக்காவின் தலைமையில் கீழ் சிங்கள மகாசபை சிங்கள இனவாதத்திற்குத் தூபமிட்டது. அதே நேரத்தில் வடக்கிலே ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தமிழர்களின் இனக் கொள்கையை முன்வைத்தது.

முதன் முதலில் தமிழ் தலைவர்கள் இலங்கையின் மத்திய அரசாங்கத்தில் ஒரு பங்கைக் கோரி நின்றனர். இது தான் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் 50க்கு 50 என்ற கோரிக்கையின் விளக்கமாகும். அதாவது நூறு அங்கத்தவர்கள் கொண்ட சட்டசபையில் தொகுதிகள் பிரிப்பதன் மூலமாக ஐம்பது சிங்களப் பிரதிநிதிகளும், இருபத்தைந்து தமிழ்ப் பிரதிநிதிகளும், எஞ்சிய சிறுபான்மை இனங்களிலிருந்து இருபத்தைந்து பிரதிநிதிகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், என்பதே அக் கோரிக்கையின் நோக்கமாகும்.

ஆனால் இந்தக் கோரிக்கையை சிங்களத் தலைவர்கள் ஏற்க மறுத்து விட்டனர். 1947ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் மகாதேவாவின் மூலமாக டி.எஸ். சேனநாயக்கா 60க்கு 40 என்ற பிரிவினையை சட்டத்துக்குள் உட்படுத்த ஏற்றுக் கொண்டார் என்று ஒரு வதந்தி இருக்கிறது. ஆனால் அதை ஏற்றுக் கொள்ளும் திறமைசாலித்தனம் பொன்னம்பலத்திடம் இருக்கவில்லை. இதில் கவனத்திற்கு எடுக்க வேண்டியது என்னவென்றால் தென்னிலங்கையில் இனவாதம் கூடக் கூட அதன் பிரதிபலிப்பாக வட இலங்கையில் இனவாதம் தலைவிரித்தாடியது.

## 2. இனத்துவ முரண்பாட்டின் மூலம்

இரண்டு இனங்களின் சார்பில் கூடக்கூட சீர்திருத்தங்கள் கேட்கப்பட்ட காலகட்டங்களில் தான் பிரித்தானிய அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளைக் கேட்டு விசாரித்து அறிந்து ஒரு தீர்ப்பைக் கொடுக்கும்படி சோல்பரிக் கொமிசனை நியமித்தது.

## சுண் எழுகுவது -

டி.எஸ். சேனநாயக்காவும் சிங்களத் தலைவர்களும் சோல்பரி கொமிசனை பகிஷ்கரிக்கத் தீர்மானித்தார்கள். ஆனால் அவர்களுடைய கருத்துக்கள் கொமிசனுக்கு கொல்லைப் புற வழியாக வழங்கப்பட்டன. ஜீ.ஜீ. பொன்னம்பலம் பகிரங்கக் கூட்டங்கள் மூலமாக கொமிசனுக்கு முன்னால் தமிழர்களின் கோரிக்கையாக 50க்கு 50 கொள்கையை முன்வைத்தார். இத்தருணத்தில் தமிழர்களின் சார்பில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் மட்டுமே ஒரே ஸ்தாபனமாக விளங்கியது. ஆனால் சோல்பரி கொமிசன் தமிழர்களின் கோரிக்கையை நிராகரித்து பாராளுமன்றத்துள் இயங்கும் ஒரு மந்திரிசபை (cabinet) முறையை அளித்தது. அதன் மூலம் பாராளுமன்றத்துள் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரு நிரந்தர சிறுபான்மையினராகக் கருதப்பட்டனர்.

அதே காலத்தில் டி.எஸ். சேனநாயக்க தேயிலை, றபர் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ் தொழிலாளர்கட்கு எதிராக ஒரு பெரிய அநியாயத்தைச் செய்தார். கிட்டத்தட்ட 10 லட்சம் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையையும், வாக்குரிமையையும் 1948ல் பறித்தெடுத்தார். இதற்குக் காரணம் இவர்கள் கையில் வாக்குரிமை இருந்தால் அவர்கள் அதை வலதுசாரி சக்திகளுக்கு எதிராகப் பாவிப்பார்கள் என்ற பயமே. 1947ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் இத்தொழிலாளர்கள் தங்களுடைய ஸ்தாபனமாகிய இலங்கை இந்திய காங்கிரஸ் மூலமாக 7 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தது மாத்திரமல்லாமல், மேலும் 14 யூ.என்.பி. எதிர்ப்பு உறுப்பினரும் வெல்வதற்குக் காரணமாக இருந்தனர். இது உச்சத்திற்கு வந்து பாராளுமன்ற தேர்தலுக்குப் பின் நடந்த முதல் உப தேர்தல் மூலமே. இத்தேர்தல் கண்டியில் நடந்தது. சிங்களவர்களும் ஏனையவர்களும் சரிசமமாக இத்தொகுதியில் பிரிந்திருந்தனர். தீர்ப்பை அளித்தவர்கள் சுமார் 2000 இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளராவர். இதன் மூலமே டி.பி. இலங்கரத்தினா முதன் முதலாக பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதே வேளை இனிமேலும் இப்படி நடக்க இடமளிக்க முடியாது என டி.எஸ். சேனநாயக்கா சபதம் எடுத்துக் கொண்டார்.

ஜீ.ஜீ. பொன்னம்பலம் தன்னுடைய கோரிக்கை வெற்றியடையாததன் பின் தன்னுடைய பகைவனாகிய டி.எஸ். சேனநாயக்காவுடன் பேரம் பேசி மந்திரிப் பதவி ஒன்றைப் பெற்றுக் கொண்டார். இதன் காரணமாக எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கிரஸை விட்டு விலகி தமிழரசுக் கட்சியை உருவாக்கினார். இக்காலத்திற்குப் பின் ஜீ.ஜீ. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் தமிழர்களின் பிரச்சினையில் ஒரு தீர்மானகரமான நபராக தலையிடக் கூடிய நிலையில் இருக்கவில்லை.

சிங்கள தமிழர் இன தொடர்புகளில் மிகப்பாரதூரமானவிடயம்தான் 1956 ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம். இக் கொள்கைக்குப் பின்னால் இரு இனத்தைச் சேர்ந்தவர்களும் இனிமேல் ஒரு போதும் ஒற்றுமைப்பட முடியாத ஒரு நிலைமைக்குத் தள்ளப்பட்டார்கள். திருவாளர் பண்டாரநாயக்க-செல்வா ஒப்பந்தம் இந்த நிலைமைகளைச் சமாளிக்க எத்தனித்தது. ஆனால் இரண்டு பக்கத்திலும் இருந்த பிற்போக்குவாதிகள் அது வெற்றி பெற இடமளிக்கவில்லை.

இதற்குப் பின் இரு மக்களிற்குமிடையில் சச்சரவை ஊட்டிய முக்கிய விடயம் 1978ல் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் ஆகும். அதே வருடத்தில் 29வது சட்டத்திருத்தம் போன்ற புதிய சட்டத்திருத்தத்தினைக் கொண்டு வருவதன் மூலமாக சோல்பரி கொமிசனின் கீழ் தமிழர்களுக்கு இருந்த சில சலுகைகளும் அற்றுப் போயின. அதே நேரத்தில் தமிழரசுக் கட்சியின் கோரிக்கையான சமஷ்டி முறை நிராகரிக்கப்பட்டது.

இந்தத் தவறான கொள்கைசட்கு எதிராக தமிழர்கள் சத்தியாக்கிரக மார்க்கமாகப் போராட்டத்தைத் துவங்கினர். 1962ல் யாழ்ப்பாணத்தில்நடந்த இந்த இயக்கத்தை ஆயுதபலத்தினால் அரசு முறியடித்தது. அதற்குப் பின் 1974ல் யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிஸாரின் துப்பாக்கி பிரயோகத்தின் மூலம் 9 தமிழர்கள் உயிரிழந்தனர்.

இதற்குப் பின் தான் 1976 இல் வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி உருவாகி தனிநாட்டுக் கோரிக்கையாக தமிழீழத்தை முன்வைத்தது. ஆனால் இந்தக் கோரிக்கையை எவ்வாறு வென்றெடுக்கலாம் என்பது பற்றி அவர்களிடம் ஒரு விதமான வழிமுறையும் இருக்கவில்லை. அகிம்சா முறையினாலும், பாராளுமன்ற சனநாயகத்தின் மூலமும் அதை வென்றெடுப்போம் என்று கூறிவந்தனர்.

ஆனால் தமிழ் இளைஞர்கள் இதனால் ஏமாற்றப்படவில்லை. தம் கண் முன்னாலேயே பலாத்காரத்திற்கு எதிராக அகிம்சை தோல்வியுறுவதைக் கண்டார்கள் அவர்கள். சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் பாராளுமன்றத்தில் தமிழ் ஈழக் கோரிக்கையை எவ்வாறு வென்றெடுக்க முடியும் என்றும் அவர்களுக்கு விளங்கவில்லை. இதன் பிரகாரமாகத் தான் கொஞ்சம் கொஞ்சமாக அகிம்சா வாதத்தை, பாராளுமன்ற ஜனநாயகத்தை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் மாத்திரமே தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்ற தீர்மானத்திற்கு இளைஞர்கள் தள்ளப்பட்டார்கள். இவ்வாறு தான் தமிழ் இளைஞர்களின் போராட்ட இயக்கங்கள் உருவாகின.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆயுத பலத்தில் நம்பிக்கையற்ற புதிய தலைமுறை தேவை!

## முஸ்லிம்கள் மீதான படுகொலைகள் பற்றி :

காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் மற்றும் பகுதிகளிலும் முஸ்லிம் மக்களுக்கெதிரான படுமோசமான தாக்குதல்கள் தமிழ் ஆயுதக் குழுக்களின் கடந்த கால விடுதலைப் போராட்டத்தில் இலகுவில் அழிக்க முடியாத கறையை ஏற்படுத்தியுள்ளன. தமிழருடைய போராட்டம் "சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கெதிரான தமிழ் பேசும் மக்களின் தார்மீகப் போராட்டம்" என்ற நிலையை மாற்றி அது வெறும் இன வெறிப் போராட்டமென்றும் அதில் சிங்கள, முஸ்லிம் மக்கள் அடக்கியொடுக்கப்படும் சமூகத்தினர் என்ற அந்தஸ்தினையே பெறுவர்" என்றும் நிரூபித்துவிட்டனர்.

மேற்படி படுகொலைகள், அரச படையினரின் வேலையாக இருக்குமோவென்ற சந்தேகம் முஸ்லிம் புத்திஜீவிகளிடையே ஆரம்பத்தில் இருந்திருந்தாலும், அதன் பிறகு நடந்த சம்பவங்கள் உதாரணமாக வயலுக்குச் சென்று அறுவடை செய்த முஸ்லிம் விவசாயிகள் கடத்தப்பட்டு கொல்லப்பட்டமை, பரந்த அளவில் முஸ்லிம்-தமிழ் எல்லைக் கிராமங்களில் தமிழ் போராளிகளின் தாக்குதல்கள் நடத்தப்பட்டமை தமிழீழ விடுதலைப் புலிகளால் திட்டமிட்டே முஸ்லிம்களை கிழக்கிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்பட்டவை என்ற ஊகத்தை நிரூபித்துக் காட்டுகின்றன.

எது எப்படியிருப்பினும் இம்மாதிரியான படுகொலைச் சம்பவங்கள் மனித வரலாற்றில் மாறாத வடுவினை ஏற்படுத்தி விட்டன. தமிழ்-முஸ்லிம் உறவு பலப்படுத்தப்பட வேண்டும். தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையினால்தான் தமது இழந்த உரிமைகளை மீண்டும் பெறலாம் என்ற சிந்தனையுடைய முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் முகத்திரை போட்டுச் செல்லுமளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பின்பற்றும் முஸ்லிம்களின் மனதில் மாறாத ஒரு வேதனைப் படலத்தை ஏற்படுத்திவிட்டன. அத்தோடு இத்தகைய பழிவாங்கும் படலங்கள், எவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் மனித காருண்யத்திற்கு மதிப்புக் கொடுக்காத அநாகரீக ஆயுதக் குழுக்கள் இருக்கின்றனவோ அதே போன்று மனித நேயமற்ற, காட்டுமிராண்டித்தனமான ஆயுதக் குழுக்களும் முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ளன என்ற கருத்தை ஏனைய மக்கள் மனதில் ஏற்படுத்தி விட்டன. இப்பழிவாங்கும் சம்பவங்களுக்கு பின்னணியில் ஆயுதப் படைகளின் தார்மீக, மறைமுக ஆதரவு அல்லது தூண்டுதல் இல்லையென்று கூற முடியாதுள்ளது. ஏனெனில் தமிழ் அகதி முகாம்களின் பாதுகாப்பு

ஆயுதப்படையினரிடமே இருந்து வந்தது. ஆயுதப் படையினரின் மறைமுக ஆதரவு இல்லாவிட்டாலும் தமிழ் அகதிகளைக் காப்பாற்றும் கடமையில் ஏற்பட்ட கவனயீனத்தால் இப்பழி வாங்கும் செயல் நடைபெற்றிருக் கக் கூடும்.

கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னணியைப் பொறுத்தமட்டில், ஆயுதப் போராட்டங்களினால், சிறுபான்மையினர் இழந்து, இழந்து கொண்டிருக்கின்ற உரிமைகளை முழுக்க முழுக்கப் பெற்று விடலாம் என்ற நம்பிக்கை கிடையாது. ஏதோவொரு வகையில் ஏதோவொரு காலகட்டத்தில் அரசியல் ரீதியான தீர்வையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதனை உதறித் தள்ளிவிட முடியாது.

ஆயுதங்களில் நம்பிக்கை வைத்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பினைக் கோருவது எல்லாம் வல்ல இறைவனுக்குச் செய்யும் துரோகம் மாத்திரமல்ல அவனுக்கு இழைக்கும் கொடூரச் செயலுக்கு ஒப்பானதாகும். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஆயுதத்தில், நம்பிக்கை கொண்ட முஸ்லிம் இளைஞர்களை நெறிப்படுத்தி, புனர்வாழ்வு பெற்றுக் கொடுப்பதே எமது இலட்சியமாகும்.

ஏற்படுவது சகஜம். சில வேளைகளில் இரு தரப்பினரிடையே ஏற்படும் தனிப்பட்ட, சிறு சம்பவங்களும் பெரும் இன மோதலாக வெடிப்பது இயற்கையே. தமிழ்-முஸ்லிம் சமூகத்தினரிடையே இவ்வாறான மோதல்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே நிகழ்ந்து வருகின்றன.

ஆனால், தமிழ்-முஸ்லிம் சமூகத்தினரிடையே திட்டமிட்ட கடத்தல்களும் பழிக்கு பழிவாங்கும் நடவடிக்கைகளும் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருகின்றமைக்கும், கடந்த 50 வருடங்களாக வேரூன்றி வந்த தமிழ்-சிங்கள இனப்பிரச்சினை கடந்த ஒரு தசாப்த காலமாக ஆயுதப் போராட்டத்திற்கு வழிவிட்டுச் சென்றமைக்கும் ஏதோவொரு வகையில் தொடர்பு இருப்பது எமக்கு தெளிவாகத் தெரிகிறது.

மக்கள் முஸ்லிம்கள் மீது வெறுப்பு கொண்டு அவர்களுக்கு சில தொந்தரவுகளைக் கொடுத்து வந்துள்ளனர். இவை இனக் கலவரங்களாக அவ்வப்போது வெடித்துள்ளன. ஆனால் 1985 இன் பின்பே அரசியல் ரீதியான இனக் கலவரங்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் போட்டி ஆயுதக் குழுக்களால் நடாத்தப்பட்டு வந்துள்ளன. அரசாங்கமும் சில உதிரிக்குழுக்களை விலை கொடுத்து வாங்கி இனக்கலவரங்களைத் காண்ட யுள்ளது. வடக்கும் கிழக்கும் பிரிந்த மாகாணங்களாகவே தொடர்ந்திருக்க வேண்டும். அப்போது தொடர்ந்தும் தமது கையாலாகாத தனமாக புனித பொருள் அகழ்வாராய்ச்சி, அந்நியர் குடியேற்றம் போன்ற சதிகளினால் கிழக்கை சிங்களவர் மயமாக்கி பிரித்து விடலாம் அதன் மூலம் ஈழக்

ஒரு சில முஸ்லிம் அரசியல் வாதிகளின் முனைப்பான செயல்பாடே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உதயமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்தை தமக்குச் சாதகமாகப் பாவித்து சிங்கள பேரினவாதத்திற்கெதிராக எடுத்துச் செல்லக்கூடிய அரசியல் முதிர்ச்சி பெற்ற தலைமைத்துவம் தமிழ் மக்களிடையே இல்லாத காரணத்தினால்தான் முஸ்லிம் மக்களுக்கெதிராக அடக்குமுறை, பழிவாங்கல்கள் பல்வேறு தமிழ் ஆயுதக் குழுக்களினால் ஏற்படுத்தப்பட்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட-கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்டு மாகாணசபைத் தேர்தலில் பங்கு கொண்டமை, முஸ்லிம் மாகாண சபைக் கோரிக்கையைக் கைவிட்டு வட-கிழக்கு மாகாணசபை கலைக்கப்படும் வரை பதவி நாற்காலிகளை பற்றிப்பிடித்துக் கொண்டிருந்தமை, வரதராஜப் பெருமாளின் ஈழப்பிரகடனத்திற்கெதிராக எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமை, காரைதீவில் 42 முஸ்லிம் பொலிஸ்காரர்கள் அடையாளம் காணப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட பின்பும் முஸ்லிம் காங்கிரஸ் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ். ஆட்சியாளர்களுடன் கூடிக் குலாவியமை போன்ற சந்தர்ப்பங்களில் அரசியல் ரீதியாக முஸ்லிம் அரசியல் கட்சி எப்பொழுதும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு முட்டுக்கட்டை போடவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. முஸ்லிம்கள் தமிழ் பேசும்



## கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னணியின் நிறுவுநர் சட்டத்தரணி ஏ.எம். நிஸார் அவர்களின் கருத்துக்கள் :

வட-கிழக்கு இணைந்த மாநிலம் ஒரு தமிழீழமாக உருவெடுப்பதையோ, அல்லது வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்த ஒரு மாகாணசபையாக மிளிர்வதையோ சிங்கள பேரினவாதச் சக்திகள் ஒரு போதும் அனுமதிக்க மாட்டா. வட-கிழக்கு தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்தால் அது தமது நீண்ட கால குடியேற்றக் கொள்கைக்கு வேட்டுவைத்ததாக முடியும் என சிங்கள பௌத்த பேரினவாதச் சக்திகள் அஞ்சுகின்றன. இதன் பின்னணியில் உருவான சதியின் காரணமாகவே 1985 இல் காரைதீவு-சாய்ந்த மருதுவில் தமிழ்-முஸ்லிம் கலவரம் நிகழ்ந்தது. இக்கலவரம் முழுக்க முழுக்க அரச படையினரால் தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட ஒரு "ஒப்பரேசன் " என்றே சொல்ல வேண்டும். இப்பாதகச் செயலுக்கு ஒரு சில முஸ்லிம் இளைஞர்களும் துணை போனதையிட்டு நாம் கவலைப்படாமல் இருக்க முடியாது.

வடக்கும்-கிழக்கும் எதிர்காலத்தில் நிரந்தரமாக இணையக் கூடாது என்ற அடிப்படை நோக்கத்துடனேயே மேற்படி தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் அரச படையினரால் தூண்டிவிடப்பட்டன. இவ்வாறான கலவரங்கள் முஸ்லிம்களால் தமிழ் மக்களை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற நோக்கில் செய்யப்படவில்லை. சரித்திர காலந்தொட்டே கிழக்கு மாகாணத்தின் பல பாகங்களிலும் இரண்டு மூன்று தமிழ் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்கள் விசுவரூபமெடுக்கும் வேளைகளில் அவற்றிற்கான காரணகர்த்தாக்கள் முஸ்லிம்களே என அப்பாவி முஸ்லிம்கள் மீது அபாண்டப் பழியை அவ்வப்போது தமிழ்ப் போட்டிக் குழுக்கள் சுமத்தி வந்துள்ளன. இதற்கு ஆதாரமாக 1990களில் காத்தான்குடி, கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை போன்ற கிராமங்களில் நடந்த சம்பவங்களைக் கூறலாம். இச்சம்பவங்களை விபரித்துக் கூறி மீண்டும் இன உணர்ச்சிகளைத் தூண்டி விடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. இவ்வாறான அபாண்டப்பழிகளால் விவரம் தெரியாத தூரத்து ஊர்களில் வாழும் தமிழ்

கோரிக்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடலாம் என்ற சதி நோக்குடன் தூண்டி விடப்பட்ட இனக்கலவரங்களின் பின்னணியை எந்தவொரு தமிழ் ஆயுதக் குழுவும் உணரவில்லை. அதன் பிரதி பலனாக முஸ்லிம் மக்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. தமது போராட்டம் தோல்வியில் முடிந்து விடும் என்றுணர்ந்த புலிகள், அதற்கான முழுப் பொறுப்பாளிகள் முஸ்லிம்களே என்று நினைத்து முஸ்லிம்களை வேருடன் அழித்தல் அல்லது கிழக்கு மாகாணத்திலிருந்து விரட்டியடித்தல் என்ற நோக்குடன் செயல்படத் துணிந்தனர். இதன் உச்சக் கட்டமாக காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகள் இடம் பெற்றன.

தமிழ்-சிங்கள கலவரங்களுக்கு, அவ்வப்போது ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள் பல்வேறு கால கட்டங்களில் தமிழ் மக்களுக்கெதிராக இழைத்து வந்த அடக்குமுறை பழிவாங்கல்கள், பாரபட்சம், போன்றவைகளும் இவைகளுக்கெதிராக தமிழ் கட்சிகள் நடத்தி வந்த அரசியல் போராட்டங்களும் காரணமாக் அமைந்துள்ளன எனக் கூறுவது தவறல்ல. தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்பட்ட கலவரங்கள் இவ்வாறான பின்னணியிலிருந்து முற்றுமுழுதாகத் தோன்றினவெனக் கூறமுடியாது. ஏனெனில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக தமிழர்களுக்கெதிராகவோ அல்லது அவர்கள் முஸ்லிம்களை அடக்குமுறைக்குள்ளாக்குகிறார்கள் என்பதற்காகவோ தமிழர்களுக்கு எதிராகப் போராடவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் கூட தமிழர்களுக்கெதிராக எழுந்ததொன்றல்ல. மாறாக சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கெதிராகவும் அவற்றின் சட்டரீதியற்ற குடியேற்றம், வேலைவாய்ப்பில் பாரபட்சம் போன்ற பிரச்சினைகளுக்கெதிராகவும் முஸ்லிம் மக்கள் கொதித்துக் கொண்டிருந்த வேளையில் பதவி, பட்டம், பணம் போன்றவைகளைச் சம்பாதிக்கும் நேரம் இதுதான் என எண்ணிய

இஸ்லாமியரா அல்லது வேறுபட்ட இனத்தவரா என்ற அடையாளப் பிரச்சினை மாத்திரம்தான் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகளினால் அநாவசியமாக அவிழ்த்து விடப்பட்டதே ஒழிய வேறு பிரச்சினைகள் அரசியல் ரீதியாக எழவில்லை. ஆனால் தொடர்ச்சியாக ஏற்பட்ட கடத்தல்கள், படுகொலைச் சம்பவங்கள், பலாத்கார பணம் பறிப்பு சம்பவங்கள், முஸ்லிம்களின் அரசியற் சுதந்திரத்திற்குத் தடை, முஸ்லிம் இளைஞர்கள் "ஜிஹாத்" என்ற போர்வையில் நையப் புடைக்கப்பட்டமை, போன்றவற்றின் பின்னரே

சரிநிகர் இதழ் 3 இல் முஸ்லிம் இனப்படுகொலை தொடர்பான கருத்தாடலின் தொடர்ச்சியாக, இவ்விதழிலும் புதிய குரல்கள்! வாசகர்களும் எழுதலாம்......

சிங்கள பௌத்த பேரினவாதிகளால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அட்டூழியங்களுக்கும் அதே பேரினவாதிகளால் வட கிழக்கிலங்கை முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கும், திட்டமிட்ட பழிவாங்கல்களுக்கும் ஒரு பொதுமைப்பாட்டை வரையறுத்து தமது விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்த முடியாத அரசியல் அரிவரிச் சிறுவர்களால் தமிழ்-முஸ்லிம் மக்களின் நிம்மதியான வாழ்வு தவிடு பொடியாக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளின் விளைவாக அப்பாவித் தமிழ் மக்கள் வீரமுனைக் கிராமத்திலும், ஏறாவூர், காத்தான்குடி கிராமங்களிலும் அடித்து துன்புறுத்தப்பட்டதும், கொல்லப்பட்டதும் இஸ்லாமிய விழுமியங்களுக்கும் முஸ்லிம்களின் சகிப்புத் தன்மைக்கும் முரணாக இருந்தும் கூட ஒரு சில முஸ்லிம் இளைஞர்கள் இன ரீதியிலான ஆவேசமும் உணர்ச்சியும் பெற்று இப்படுகொலைப் பழிவாங்கும் படலத்தை செய்து முடித்தமை, இனரீதியாக சிந்திக்கும் முஸ்லிம்களைத் தவிர, ஏனைய முஸ்லிம்களின் குறிப்பாக இஸ்லாம் மார்க்கத்தை ஒழுங்காகப்

இம்மாதிரியான சிந்தனை தமிழ் மக்கள் மத்தியில் இடம் பெற வேண்டும். பொறுமை எல்லை கடந்து போகும் போது ஆயுதப் பாவனைக்கான தேவை ஏற்படுவது இயங்கியல்தான், என்றாலும் ஆயுதத்தை ஏன் பாவித்தோம் எச்சூழ்நிலைகளில் பாவித்தோம் என்ற கேள்விகளுக்கு நியாயமான பதில்களை தேடிக் கண்டு பிடிப்பதற்கு முன் சகல விதமான பேச்சு வார்த்தைகள், கருத்துப் பரிமாறல்கள், சர்வதேச ரீதியிலான அமுக்கங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கடைசி ஆயுதங்களாகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஆயுதத்தில் நம்பிக்கை வைக்காத இளம் பரம்பரை தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவாக வேண்டும். இரு சமூகத்தவர்களும் ஆன்மீகத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். இதுவே பொது எதிரிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தின் முதற்படியாகும்.

## முஸ்லிம் தமிழ் கலவரங்களின் பின்னணி பற்றி :

பல்லின மக்கள் சமுதாயமொன்றில் இனங்களுக்கிடையே முரண்பாடுகளும் மோதல்களும்

நன்றி - நூலகத்திட்டம்



தமிழ்-முஸ்லிம் உறவில் பாரிய இடைவெளி ஏற்பட்டது. இதற்கிடையில் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்திய புலிகள் அதிக பட்சக் கோரிக்கைகளாக வட-கிழக்கு இணைந்த மாநிலத்தை அடையத் தவறியமை, அரச-புலிகள் யுத்தத்தில் புலிகள் பலவீனமடைந்து கொண்டிருக்கின்றமை போன்ற காரணிகள் சர்வகட்சி மாநாட்டில் நிபந்தனையற்ற வட-கிழக்கு இணைப்புக்கெதிராக முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒன்று படவைத்தன. வரதராஜப் பெருமாள் கைக்கொண்ட இராஜதந்திரம் போன்று விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களுடனும், முஸ்லிம் அரசியல் கட்சிகளுடனும் அனுசரித்துப் போயிருந்தால் முஸ்லிம் அரசியல் கட்சிகள் அரசியல் சுலோகமாகக் கூட முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன் வைத்திருக்க மாட்டா. முன்னாள் இந்திய ஹைகமிஷனர் திரு. டிக்ஸித்தும் இந்திய உளவு ஸ்தாபனமான "ரோ"வும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் நடவடிக்கைகளை ஒரு சில குறுகிய காலத்திற்கு தமக்குச் சாதகமாக பாவித்தது போல விடுதலைப்புலிகள் வட-கிழக்கில் பிரகடனப்படுத்தாத ஆட்சியை நடாத்திக் கொண்டிருந்த போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளைத்துப் பிடிக்கத் தவறி விட்டார்கள்.



நமது துயரைச் சுமக்க மலைகள் இல்லை!
நமது கண்ணீர் கரையவும் ஆறுகள் இல்லை...

## முஸ்லிம்களின் இனத்துவ அடையாளம் பற்றி:

இப்பிரச்சினை இன்று நேற்று தொடங்கியதல்ல. சேர் பொன்னம்பலம் இராமநாதன் காலத்திலிருந்தே தோன்றியதாகும். இதை ஒரு பாரிய பிரச்சினையாகக் கொண்டு தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம் மக்களை அனுகியதால்தான் தமிழ்-முஸ்லிம் உறவில் பெரியதொரு இடைவெளி ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், இஸ்லாத்தை ஒரு மதமாகக் கொள்வதைவிட அதை ஒரு வாழ்க்கை வழிகாட்டியாகக் கைக்கொண்டு பேணிவருவதையே அதிகம் விரும்புகிறார்கள். இன அடிப்படையிலோ அல்லது மொழி அடிப்படையிலோ சாதி அடிப்படையிலோ பிரிந்து போவதை குர்ஆன் அனுமதிக்கவில்லை. அரபியைவிட அரபியல்லாதவரோ அல்லது அரபியல்லாதவரை விட அரபியரோ மேலானவரல்ல. அத்தோடு வெள்ளையரை விட கறுப்பரோ கறுப்பரை விட வெள்ளையரோ மேலானவரல்ல, என இஸ்லாம் எடுத்தியம்புகிறது. அரபியர், பாரசீகர், துருக்கியர், பாகிஸ்தானியர், வங்காளிகள் என இனரீதியாக பிளவுபடுவதையோ, மொழிரீதியாக வேறுபடுவதையோ சர்வதேசரீதியாக முஸ்லிம்கள் விரும்பாதது போலவே, உள்நாட்டு ரீதியாகவும், தமிழ் பேசும் முஸ்லிம்கள், மலாய் பேசும் முஸ்லிம்கள், உருது பேசும் முஸ்லிம்கள் என பிளவுபடுவதையும் பிரிவுபடுவதையும் முஸ்லிம்கள் விரும்பவில்லை. இதை ஒரு அரசியல் கண்ணோட்டமாக வல்லாமல் ஒரு சமூகக் கண்ணோட்டமாகவே சகலரும் நோக்க வேண்டும். ஒற்றுமையும் இறைபக்தியும் இஸ்லாம் எனும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை முஸ்லிம்கள் ஒரு பொழுதும் விட்டுக் கொடார். வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பில் முஸ்லிம்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதால் தமிழர்கள் எதனையும் இழந்து விடப் போவதில்லை. மாறாக தமிழர்களின் அரசியல் போராட்டம் மேலும் பலமடைவதை இப்பிரச்சினையை நேர்முகமாக அணுகுவதன் மூலம் காணலாம். கிழக்கிலங்கை முஸ்லிம்கள், தம்மை தமிழ் பேசும் முஸ்லிம்கள் எனக் கூறிக் கொண்டு சிங்கள பேரினவாத சக்திகளின் அபிலாஷைகளுக்கெதிராக ஒரு தீர்மானம் எடுப்பதன் மூலம் சிங்களப் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களை சிங்களம் பேசும் முஸ்லிம்கள், அவர்களுக்கு சிங்களவர்களால் எதுவும் நிகழாது எனத் திருப்திப்பட முடியாது. வடகிழக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதோடு சிங்களமக்களின் தனித்துவத்தை அங்கீகரிப்பதன் மூலமும் இனப் பிரச்சினையில் ஒரு திருப்பத்தையும் இதுவரை காணாத வெற்றிகளையும் தமிழ் மக்கள் பெறலாம் என்பது கிழக்கிலங்கை இஸ்லாமிய இளைஞர் முன்னணியின் கருத்தாகும்.

## இணைப்புக் குறித்தான முஸ்லிம்களின் அச்சம் பற்றி:

தமிழ்-முஸ்லிம் கலவரங்கள் அரச படையினரால் தூண்டிவிடப்பட்டதாகவும் தனிப்பட்டவர்களிடையே ஏற்பட்ட பூசல்கள் இனரீதியாக வடிவமெடுத்ததாகவும் நான் ஏற்கனவே கூறியுள்ளேன். ஆக, முஸ்லிம்கள் ஒரு பொழுதும் வட-கிழக்கு இணைப்புக்கெதிராக ஒரு பெரிய இனக்கலவரத்தை தூண்டவோ அல்லது அதில் ஈடுபடவோ வில்லை. மாறாக தமிழ்-முஸ்லிம் சமூக விரோத சக்திகள் அரசின் கூலிப்பட்டாளங்களாக மாறி தமிழ்-முஸ்லிம் இனக் கலவரங்களைத் தூண்டியுள்ளன என்பதே எமது கருத்தாகும். அதிகாரப் பரவலாக்கம் இன, மத, சாதியடிப்படையில் நிகழக்கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும். மாறாக, அது புவியியல் ரீதியாகவும், பொருளாதார மூல வளங்களைப் பொறுத்தும் அமைய வேண்டும் என்பதே எமது இறுதி முடிவாகும். இதன் அடிப்படையில் முஸ்லிம் மாகாணம், சிங்கள மாகாணம் என நாடு பிளவுபடுவதை நாம் விரும்பவில்லை. எமது இந்நிலைப்பாடு, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வடக்கையும் கிழக்கையும் இணையவிடாமல் கிழக்கை வேறாக பிரிக்க முனையும் சதித் திட்டத்திற்கு முட்டுக் கொடுப்பதாக யாரும் நினைத்து விடக் கூடாது. கடந்த 50 வருடகாலமாக சிங்கள அரசாங்கங்கள் தேசிய சிறுபான்மை இனங்கள் விடயத்தில் முறையாகவும் நியாயமாகவும் நடந்து கொள்ளவில்லை. இன்று புண் புரையோடிப் போய்விட்டது. பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியெடுக்கப்பட்டன. மத்திய அரசாங்கம் சிறுபான்மையினங்களுக்குரிய அந்தஸ்தையும் உரிமைகளையும் உரிய நேரத்தில் கொடுத்திருந்தால் இன்று ஏற்பட்டிருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்காது. மத்திய அரசு பெரும்பான்மையினரையும் சிறுபான்மையினரையும் சமமாக நடத்தியிருந்தால் மொழி, மத, இன அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்று ஏற்பட்டிருக்காது. நாங்கள் தவறிழைத்து விட்டோம். இனங்களுக்கிடையே வெறுப்பும் பகைமையும் உச்ச கட்டத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மொழி, மத, இன அடிப்படையில் தனி அதிகாரப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என கோரிக்கைகள் எழுப்பப்படுவதை நாம் உதாசீனம் செய்யமுடியாது. இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் மொழி அடிப்படையில் வடக்கும் கிழக்கும் இணைய வேண்டும் எனக் கோருவதும் முஸ்லிம்கள் வடக்கும் கிழக்கும் இணைந்த அமைப்பில் தனியானதொரு அமைப்பை மத அடிப்படையில் கோருவதும் சுயாதீனக் கண்ணோட்டத்தில் நோக்கும் ஒருவனுக்கு பிழையாகத் தெரியமாட்டாது. வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் அது முஸ்லிம்களுக்கு பாதகமாக அமையுமென பின் வரும் காரணங்களுக்காக அவர்கள் தம் வாதத்தை முன் வைக்கின்றனர்.

* தற்பொழுது கிழக்கு மாகாணத்தில் வதியும் 34% வீத முஸ்லிம்கள், வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் 17% வீத அந்தஸ்த்து. வேலைவாய்ப்பு, காணிப் பங்கீடு ஆகியவற்றைப் பெறுவதோடு அரசியல் ரீதியாகவும் ஒரு கவனத்திற் கொள்ளாத ஒரு சமூகமாக நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டும்.

* யாழ்ப்பாண தமிழ் மக்களும், மலையக மக்களும் கிழக்கு மாகாணத்தில் அரச காணிகளில் குடியேற்றப்படும் பொழுது முஸ்லிம் மக்களுக்கு காணித்தட்டுப்பாடு, குறைந்தளவு பிரதிநிதித்துவம் ஏற்படுமென அஞ்சுகின்றனர். இது நியாயமான அச்சமெனினும் இவ்வாறான அச்சங்களைப் போக்குவது தமிழ் கட்சிகளின் கடமையாகும்.

வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக கூட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்கள் எதிர்க்கவில்லை. இந்த 'சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை அங்கீகரித்து வட-கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கத் தவறிவிட்டன தமிழ் ஆயுதக் குழுக்கள். இதற்குரிய முழுப்பொறுப்பையும் ஏற்காமல் பாரம்பரிய பிரதேசங்களில் பல நூற்றாண்டுகளில் முன் குடியேறி வாழ்ந்து வரும் முஸ்லிம்களை வெளியேறுமாறு துண்டுப் பிரசுரங்கள் மூலம் கோருவது ஒரு பொழுதும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக மாட்டாது. தமிழ் விடுதலை இயக்கங்கள், வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக இணைக்கப்பட்டால் அது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் நன்மை பயக்கும் என நிரூபித்துக் காட்டுவதற்கு முஸ்லிம்களுக்கெதிரான எச்செயலையும் செய்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அடக்கு முறை மூலம் வடக்கையும் கிழக்கையும் நிரந்தரமாக இணைத்து விடலாம் என தமிழ் ஆயுதக் குழுக்கள் நம்புமாயின் அது அவர்களின் விடுதலைப் போராட்டத்தில் பிழையான தந்திரோபாயத்தை தெரிவு செய்ததாக முடிந்து விடுவதோடு பிழையான தந்திரோபாயங்களைத் தெரிவு செய்து கெரில்லாப் போராட்டங்களை நடத்தியோருக்கு நடந்த கதியே இவர்களுக்கு ஏற்படும்.

## தமிழர்களை முஸ்லிம்கள் காட்டிக் கொடுத்தனரா?

அண்மைக்காலமாக அரச - புலிகள் மோதல் பலமடைந்து வருவதால் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் நிலை கொண்டிருந்த புலிகள் புறமுதுகு காட்டியது அனைவருக்கும் தெரியும். தற்போது அப்பாவி முஸ்லிம்களை மறைந்திருந்து தாக்கி வரும் புலிகள் அதனை நியாயப்படுத்த முஸ்லிம்கள் தமிழர்களை 'புலிகள்' என இலங்கை இராணுவத்தினருக்கு காட்டிக்கொடுத்தனர் எனும் பழியைப் போடுகின்றனர்.

இலங்கையில் பல காலங்களாக தமிழ் முஸ்லிம் நல்லுறவு பேணப்பட்டு வந்தது. ஆனால் ஆயுதந்தாங்கிய தமிழர் பலர் தமதுள்ளங்களில் இனவாதத்தை நிரப்பி முஸ்லிம்களுக்கெதிரான அடாவடித்தனங்களில் இறங்கியதன் விளைவாகவே தமிழ் முஸ்லிம் நல்லுறவு சிதைந்தது.

1990 ஜூன் மாதம் அரசுடன் புலிகள் மோதிக்கொண்டதனால் கணிசமானோர் பாதிக்கப்பட்டனர். அப்பாவிகளும் தாக்கப்படுவது இத்தகைய போர்களில் தவிர்க்க முடியாததுதான், பல பயங்கரவாதிகள் பொதுமக்களுக்குள் மறைந்து கொள்வதனால் இத்தகைய நிலை ஏற்படலாம். ஆனால், முஸ்லிம்கள் தமிழர்களைக்காட்டிக்கொடுத்தனர் என்பது உண்மை எதுவென தெரிந்து கொண்டே வீசப்படும் அபாண்டமாகும். சமூகத்துக்குக் கட்டுப்படாத சில முஸ்லிம் வாலிபர்கள் இராணுவத்துடன் ஒத்துழைத்திருக்கலாம். அதனை வைத்து முழு முஸ்லிம்கள் மீதும் பழி போடுவது அறிவற்ற செயலாகும். எல். ரி. ரி யினர் வட கிழக்கில் ஆட்சியிலிருந்த போது கூட முஸ்லிம்கள் விசனம் கொள்ளுமளவு நடந்துகொண்டனர். அப்போது சில தமிழர்கள் அப்பாவி முஸ்லிம் வாலிபர்களை 'ஆயுதந்தாங்கியோர்' என காட்டிக்கொடுத்ததனால் புலிகள் அவர்களை பிடித்துச்சென்றனர்.

தமிழர் சிலர் இவ்வாறு காட்டிக்கொடுத்ததற்காக முழு தமிழ் சமூகத்தின் மீதும் முஸ்லிம்கள் பழி சுமத்தினரா? இல்லையே! அதே போல் புலிகளுடன் முஸ்லிம் சமூகத்தின் சில முனாபிக் கள் இணைந்து செயற்பட்டது அனைவருக்கும் தெரியும், அரசுக்கும் புரியும். அதற்காக இலங்கை இராணுவம் முழு முஸ்லிம்கள் மீதும் பழியைப்போட்டு அவர்களைத் தாக்கினரா? எத்தனை நியாயமாய் அவர்கள் நடந்து கொண்டனர்.

எந்த சமூகத்திலும் ஊருக்குக்கட்டுப்படாத சிலர் இருக்கத்தான் செய்வர். அதற்காக முழு ஊரையும் குற்றம் சாட்டுவது விவேகமானதல்ல. உண்மையில் கிழக்கு முஸ்லிம்கள் இராணுவத்தின் உதவியை நாடியிருந்தால் இந்நேரம் கல்முனை தமிழ்ப்பகுதி, காரைதீவு போன்ற ஊர்கள் பெருந்தாக்குதலுக்குள்ளாகியிருக்கும், ஆனால் முஸ்லிம்கள் பொறுமையைக் கடைப்பிடித்தனர். 1984 காரைதீவுச்சம்பவத்தில் தாம் முட்டாள்களாக்கப்பட்டது போன்று இம்முறை ஆகிவிடக்கூடாதுஎன்பதில் அவர்கள் கவனமாயிருந்தனர் அதனாலேயே இந்த ஊர்கள் தாக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, இராணுவ நடவடிக்கைகளுக்குப்பயந்து கல்முனைக்குடி போன்ற முஸ்லிம் ஊர்களுக்குள் தமிழ்ப்பெண்களும், வாலிபர்களும் தஞ்சம் புகுந்த போது மனிதாபிமானம் கருதி முஸ்லிம்கள் உதவியதையும் காணக்கூடியதாக இருந்தது.

இவற்றையெல்லாம் உணராமல் புலிகள் முஸ்லிம்களை கொள்ளை, கொலைகள் செய்து வருகின்றனர். இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளனர். இத்தகைய ஈனத்தனமான செயல்களைப்பொறுக்கமுடியாமல் சில முஸ்லிம் வாலிபர் கொதித்தெழுந்து பதில் நடவடிக்கையில் ஈடுபடலாம். அதற்காக அவர்களைக்குறை கூறவும் முடியாது ஏனெனில் சிங்களப் பேரினவாதிகளின் அடக்குமுறையைப் பொறுக்க முடியாமற்தான் தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர். தமிழ்ப் பேரினவாதமும் அவ்வாறே செயல்படும் போது முஸ்லிம் இளைஞர்களும் கொதித்தெழுவது நியாயமானதே! ஆகவே தமிழ் மக்கள் முஸ்லிம்களைப்புரிந்து கொள்வது அவசரத்தேவையாகும். முஸ்லிகள் மீது வீண் பழிகளை சுமத்தி அவர்கள் மீது அடக்குமுறைகளை அவிழ்த்து விடுவதனால் இவ்விரு சமூகங்களுக்குமிடையில் இடைவெளி மேலும் பெரிதாகிவிடும். இந்த நாட்டைப்பொறுத்தவரை தமிழர்களும் முஸ்லிம்களும் மோதிக்கொள்வதனால் எவரது உரிமைகளையும் பெறப்போவதில்லை. இதனால் கொள்ளையரைத்தவிர வேறு எவருக்கும் பிரயோசனமில்லை யென்பதை அனைத்து தமிழ் இயக்கங்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். ஒருவர் பிறரை மதிப்பதன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவை மீண்டும் புதுப்பிக்க முனைவோம்.

- முபாறக் அப்துல் மஜீத்

வெளியீடு : இலங்கை இஸ்லாமிய காவல் நிலையம்.

# கோட்டை மாண்மியம்

மூந்நூறு ஆண்டுகால பழமைவாய்ந்த டச்சுக் கோட்டையை விட்டு இலங்கை அரச படைகள் 'வெளியேறிய' போது இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பத்திரிகையாளர் மத்தியில் இவ்வாறு தெரிவித்தார். "வடக்கிலுள்ள எட்டுலட்சம் மக்களது நலன்களை அடிப்படையாகக் கொண்டு, யாழ் ஆஸ்பத்திரியை இயங்க வைக்கவும், ஆஸ்பத்திரிப் பிராந்தியத்தை அமைதிப் பிரதேசமாக்கவுமே நாம் அங்கிருந்து வெளியேறுகிறோம். கோட்டையை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்கும். ஆனால் விடுதலைப் புலிகள் அதனுள் நுழைவதை நாம் அனுமதிக்க மாட்டோம்."

ஆனால் கோட்டையிலிருந்து அரச படைகள் "வெளியேறி" ஒரு சில தினங்களுக்குள்ளாகவே புலிகள் அதனுள் புகுந்து கொண்டு அதை முற்றாக தமது ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்ததுமல்லாமல், அங்கே புலிக் கொடி ஒன்றை ஏற்றியும் வைத்தார்கள்.

ஆஸ்பத்திரிப் பிராந்தியத்தை அமைதிப் பிராந்தியமாக ஒருதலைப்பட்சமாக அறிவித்த அரசு, இரண்டு மாதங்களிற்கு முன்னர் புலிகள் கோட்டையை செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்து விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கேட்ட போது அதைப் பரிகசித்து மறுத்து விட்டு இப்போது திடீரென வடக்கிலுள்ள மக்கள் மீது தனக்கேற்பட்ட "கரிசனையால்" வெளியேறியதாக அறிவித்த அரசு, தனது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தப் பிரகடனத்தை மீறி அப்பிராந்தியத்துள்ளே திரும்பவும் விமானத்தாக்குதலை தொடங்கியது. "கோட்டைக்குள் ஈழக் கொடியை பறக்கவிட யாருக்குமே உரிமை கிடையாது! அதனை எவ்வளவு செலவானாலும் நாம் அகற்றியே தீருவோம்! என அறிவித்து திரும்பவும் அது தாக்குதலை தொடுத்தது. முன்பொருமுறை – அப்போது புலிகளும் அரசும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த போது – இலங்கை அரசுக்கு சொந்தமான அலுவலகங்களில் கூட புலிக் கொடி பறக்க விடப்பட்டிருப்பதை பத்திரிகையாளர்கள் சுட்டிக் காட்டியபோது" இது ஒரு சனநாயக நாடு. இங்கு யாருக்கும் எந்தக் கொடியையும் பறக்க விடும் சுதந்திரம் உண்டு" எனத் தெரிவித்த அதே அமைச்சர் ரஞ்சன் தான் இந்த கோட்டைக் கொடி அகற்றும் தாக்குதலுக்கு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.!

உண்மையில் இலங்கை அரசுக்கு தமிழ் மக்கள் மீது திடீரென ஒரு கரிசனை ஏற்பட்டிருக்க முடியுமென்றால், அது தனது படைகள் கோட்டைக்குள் இருக்கும் போதே அதைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்து விட்டு வெளியேறியிருக்க வேண்டும். ஆனால் அரசோ, தனது படையினரை முற்றாக அப்புறப்படுத்திவிட்டு கோட்டையை வெற்றிடமாக்கி விட்டுத்தான் செஞ்சிலுவை சங்கத்திடம் அங்கே போகுமாறு அறிவித்தது. ஆனால் விடுதலைப் புலிகளோ, தாமே அரசபடைகளை விரட்டியதாக அறிவித்து கோட்டையை முற்றாக தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்; அங்கிருந்த "அடிமைச் சின்னங்களை" வெடி வைத்துத் தகர்த்தனர். கோட்டையை பொது மக்கள் பார்வைக்கு திறந்து விட்டதுடன் தற்போது அதன் மதிலை உடைப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கோட்டையை கைப்பற்றியது புலிகள் அல்ல எனவும், அது தம்மால் கைவிடப்பட்ட ஒன்றே என அரசு அறிவித்தபோதும் நிகழ்ச்சிகள் அதற்கு எதிரானதாகவே உண்மை இருப்பதாக காட்டுகின்றன. ஸ்டான்லி வீதி வரையில் தமது படைகள் முன்னேறியதாக அறிவித்த அரசுக்கு கோட்டையை விட்டு வெளியேற வேண்டிய தேவை ஏற்பட அவசியமில்லை. அத்துடன், அரசு திரும்பத் திரும்ப சொல்வது போல அது இராணுவ ரீதியாக முக்கியத்துவமற்ற ஒன்றாக இருந்தாலும் கூட, படைகள் ஸ்டான்லி வீதி வரை முன்னேறிய பின் அதைவிடவும் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக வேறெதுவும் இருக்க முடியாது என்பது வெளிப்படை.

உண்மையில் இலங்கையின் அரசப் படைகள் கோட்டைக்கு வெளியே ஒரு அங்குலம் கூட நகர முடியவில்லை என்பதும், கோட்டையிலிருந்து வெளியேறுவது மட்டுமே அதிக இழப்பின்றி தம்மை பாதுகாத்துக் கொள்ள உள்ள ஒரே வழி என்பதும் காரணமாகவே படையினர் பின்வாங்கியிருக்க வேண்டும். ஆனால் தமது பின்வாங்கலை நியாயப்படுத்த ஏதாவது சாக்கு போக்கு தேவைப்பட்டது. மக்களை ஏமாற்றி, அவர்கள் மத்தியில் இனவாதத்தை வளர்த்து தனது யுத்தத்திற்கு ஆதரவாக திரட்ட முயன்று வந்த அரசு அதில் எதிர்பார்த்தளவு பெரும் வெற்றியை ஈட்டிவிட முடியவில்லை என்பதால் தனது இந்த மக்கள் மீதான அக்கறையை காட்ட வேண்டிவந்தது.

நிதானமாக யோசிக்கும் ஒருவர் மிகவும் இலேசாகவே புரிந்து கொள்ளக் கூடிய விசயங்கள் சில இந்த நடவடிக்கைக்குள் இருந்தன. ஒன்று அரசு சொல்வது போலவே அதற்கு யாழ் ஆஸ்பத்திரியை இயங்க வைக்கும் அக்கறை இருந்திருந்தால் அது கோட்டையைப் பற்றியே அக்கறைப்படாமல் அதை நடைமுறைப்படுத்த முயன்றிருக்க வேண்டும். ஆஸ்பத்திரியை இயங்க வைப்பதுக்கும் கோட்டையை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்பதற்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாக தெரியவில்லை. இரண்டு புலிகள் கோட்டையுள் புகுந்து அதை தகர்த்து கொடி ஏற்றியதும் அதன் மீது குண்டுத்தாக்குதலை செய்திருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் இத்தாக்குதல் திரும்பவும் ஆஸ்பத்திரிப் பிராந்தியத்தை யுத்தப் பிராந்தியமாக்கி விட்டது.

எப்படியோ இந்தப் பின்னடைவின் பின்னர் அதை தமது தந்திரோபாய நடவடிக்கை என வர்ணித்த அரசு, இப்போது பலாலியிலிருந்து தனது தாக்குதலை ஆரம்பித்துள்ளது. கோட்டையிலிருந்து ஸ்டான்லி வீதிவரை சென்றதாக அறிவித்தது போலவே இப்போதும் பலாலியிலிருந்து முன்னேறியுள்ளதாக அறிவித்துள்ளது. உண்மையில் கோட்டையிலிருந்து தாக்குதல் நடாத்திய காலம் முழுவதும் அரச படைகள் சாதித்ததெல்லாம் யாழ் நகரை சுற்றியுள்ள சுமார் 3 மைல் சுற்றாடலை முற்றாக நிர்மூலமாக்கியதுதான். சீனாவின் யுவான் 8 இனால் நொருக்கப்பட்ட தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள் கட்டிடங்கள் என்பவற்றின் சொத்துக்கள் பல கோடி பெறுமதி வாய்ந்தவை. நாடுகளிடையேயான யுத்தத்தில் பாவிக்கப் படுகிற மாதிரியான பெரும் பீப்பாய்க் குண்டுகள் மக்களின் குடியிருப்புகள் மீது கூட வீசப்பட்டன. இன்னொரு பத்தாண்டு காலத்திற்கு நிமிர்ந்து நிற்க முடியாதபடி யாழ் நகர் சுற்றுப்புறம் பூராவும் தகர்க்கப்பட்டுள்ளது.

இப்போது பலாலியிலிருந்து படைகள் ஆரம்பித்துள்ள இந்த யுத்தம் எஞ்சியுள்ள குடாநாட்டின் பகுதிகளையும் தரைமட்டமாக்கி விடுகிற நோக்குடன் செய்யப்படுகின்றன என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் தரைமார்க்கமாக நகராமல் விமானம் மூலமாகவே தாக்குதலை நடாத்தும் அரசுக்கு வேறு நோக்கமிருப்பதாகக் கொள்ள முடியாது. ஸ்டான்லி வீதிவரை முன்னேறிவிட்டதாக முன்பு அரசு அறிவித்ததைப் பற்றி ஒரு யாழ்வாசி கருத்து தெரிவிக்கையில் "உண்மைதான். இப்ப அவங்கள் கோட்டையிலை இருந்து பார்த்தால் ஸ்ரான்லி றோட், பொம்மை வெளி, குருநகர் எல்லாம் தெரியும். அவ்வளவுக்கு எல்லாம் கிளீன் பண்ணியாச்சு. அதுதான் அப்பிடி சொல்லுறாங்கள்." என்று குறிப்பிட்டார். இப்போது தாம் மல்லாகம் வரை வந்துவிட்டதாக அரசு அறிவிக்கும் போது அது மாதிரியான ஒரு முன்னேற்றம்தானா இதுவும் என்ற சந்தேகம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

இந்த நேரத்தில் தோன்றுகிற ஒரே கேள்வி இதுதான். உண்மையில் அரசாங்கத்தின் நோக்கம்தான் என்ன?

முழு யாழ்ப்பாணத்தையும் "சீனச் சகடைக்கு" (இப்படித்தான் யாழ் மக்கள் Y-8 ஐ அழைக்கிறார்கள்) க்கு இரையாக்குவதுதானா? முழு குடாநாட்டையும் தரைமட்டமாக்கி விட்டு அதன் பிறகு என்ன செய்யப் போகிறது அரசு? அதன் பிறகும், திரும்பவும் அரசியல் "தீர்வு" காணப் பேச்சுவார்த்தை நடாத்துவதா? அல்லது யுத்தத்தால் நொந்து போயிருக்கிற தமிழ் மக்களை காலால் எற்றி விடுவது போல எற்றி விட்டு ஆதிக்கம் செலுத்துவதா? என்னதான் நோக்கம்?

வாங்குவதிலும் அரசு காட்டி வரும் அக்கறையை, பிரச்சினையை தீர்த்து வைப்பதில் காட்டுவதாக தெரியவில்லை. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக அரசு தான் முன்வைக்க விரும்புவது என்ன? என்பதை இதுவரை தெளிவாக முன்வைக்கவில்லை. தமிழ்க் கட்சிகளிடம் ஆலோசனை கேட்கும் நிலையில் தான் இன்னமும் – இனப் பிரச்சினையின் 40 ஆண்டு கால நெருக்கடியின் பின்னரும் – அரசு இருக்கிறதென்றால், அவர்களில் சிலரை சமரசம் செய்து "சமாளிக்கப்" பார்க்கிறது என்றால், இலங்கையில் இன்னும் ஒரு சில பத்தாண்டுகளுக்கு யுத்தம் தொடரத்தான் போகிறது. பல பத்தாயிரம் இளைஞர்கள் இருபுறமும் அநியாயமாக மாளத்தான் போகிறார்கள். யுத்தம் பலிகொள்கிற மக்களையும் இளைஞர்களையும் தியாகிகளாகவும், தேசபக்தர்களாகவும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் தேசத்திலும் மக்களிலும் எந்தவித அக்கறையுமற்றவர்களது நோக்கங்களுக்காக பலியாகிற அந்த அப்பாவிகளின் தேசபக்தி உண்மையில் தேசத்தை நாசமாக்க மட்டுமே பயன்பட்டுக் கொண்டிருக்கிறது!

வரலாறு எப்போதும் கண்களை திறந்த வண்ணமே உள்ளது. அதன் பார்வையில் இருந்து எதையும் ஒழித்து விட முடியாது. இலங்கை அரசின் தேசபக்த வேசமும், மக்கள் படுகொலை அரசியலும் ஒரு நாள் கேள்விக்குள்ளாக்கப்படப் போவது நிச்சயம். அப்போது வரலாற்றின் தீர்ப்பு சீனச் சகடையின் 300 kg எடையுள்ள குண்டை விட கோரமானதாக இருக்கும் இவர்களுக்கு!

வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பிற்கு முஸ்லிம் தமிழ் உறவை முந்நிபந்தனையாக்கி விட்டு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கும் அரசு, சர்வகட்சி மாநாட்டை கூட்டி வைத்து "என்ன செய்யலாம்?" என ஆராய்வதாக நடித்துக் கொண்டிருக்கும் அரசுக்கு இந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் எந்தவித அக்கறையும் இல்லை என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. யுத்தத்தை நடாத்துவதற்காக கடன் கேட்பதிலும் ஆயுதங்கள்

புலவர் பொன்னையா,
சுதுமலை.

## 2 கவிதைகள்



மெல்ல நிலவு முகிலுள் நழுவ
மரங்கள் நீசராய்ப் பார்த்திருக்க
"வேசைக் காற்றும்" கவனியாது
நகரும்.

ஆட்காட்டியின் அலறலும்,
உன்னுடைய ஒலமும்,
ஆதரவிழந்து வெளியில் கரைய
கண்ணனும் வராது போனான்.

இருளோடு இருளாய் அரக்கனும் மறைய
இழந்து முடிந்ததோ எல்லாம்,
இல்லை
இன்னமும் உள்ளது வாழ்வு.
தொடர்ந்து நடப்போம்.

பா. அகிலன்
24.07.90

### வாழ்வு எழுதல்

கனவுகளும்கண்ணிமையும்
முன்னொருகால் படபடத்த
என் சிறு பெண்ணே

வடக்கின் வளம் கூறும்
வடலியின் இருளுக்குள்
வாழ்விழந்ததாய்

ஊர் பேசட்டும்
பேச்சற்று- உன்
இதயத்து வடிகிற
இரத்தத் துளிகளை
எதிர் கொள்ள முடியாது
கோழைகள் பேசட்டும்

மனிதனிடத்து
பறிக்கப்பட முடியாதது
அவன் ஆத்மாவும்
அதன் சம்மதமும்
அது எனக்குத் தெரியும்

பறிக்க முனைந்தவன்
இழந்தனன் தன் ஆத்மாவை
இருளாய் கரைந்தான்
மனிதனே அல்ல.

இரத்தத்தை எச்சிலாய் திரட்டி
இருளின் மீது உமிழ்
பின்னர், எழுந்து வா.

இந்திரன்
07.08.90



நன்றி - நூலகத்திட்டம்



# பெண்நிலை: இரட்டைச் சுமை!

— பாஞ்சாலி


ஏனைய வளர்முக நாடுகளைப் போலவே, இலங்கையிலும் கிராமங்களில் வாழும் வறிய பெண்களில் பெரும்பான்மையோர் தமது சொந்த வீட்டு வேலைகளைக் கவனிப்பதுடன் சந்தைக்கான பொருள் உற்பத்தியில் (உதாரணமாக, பாய் இழைத்தல், பனங்கட்டி செய்தல், கற்பூர உற்பத்தி) அல்லது சேவை வழங்கலில் (வீட்டுப் பணிப்பெண்களாக கடமையாற்றல்) ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இவர்களில் அநேகமானோர் தோட்டங்களிலும் வயல்களிலும் கூலி வேலை செய்கிறார்கள். இன்னும் சிலர் தமது வீடுகளில் இருந்தபடியோ அல்லது சிறுவேலைக் கூடங்களிலோ வேலை பார்க்கிறார்கள். இவ்வகைத் தொழிலாளர்கள் அனைவருக்கும் பொதுவான அம்சம் யாதெனில், இவர்கள் அனைவரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் காணப்படுவதுடன், வெவ்வேறு தொழில் கொள்ளுநர்களிடம் வெவ்வேறு வேலை நிபந்தனைகளின் கீழ் வேலை செய்வதாகும். இதனாலேயே இதனை 'ஒழுங்கு படுத்தப்படாத' தொழிற்துறை (unorganised sector) என அழைப்பர்.

அரசாங்கம் தொடக்கம் தொழிற்சங்கங்கள் வரை 'தொழிலாளர்கள்' தொடர்பான வேலைத் திட்டங்களை அமுல்படுத்துகையில் தொழிற்சாலைகளிலும் ஏனைய வேலைத்தளங்களிலும் வேலைசெய்யும், தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை மனதிற் கொண்டே செயற்படுகின்றன. எனவே அநேகமானோர் 'ஒழுங்குபடுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்த தொழிலாளர்களைத் 'தொழிலாளராக' இனங் காணத் தவறி விடுகிறார்கள். மேலும் 'ஒழுங்கு படுத்தப்பட்ட' தொழிற்துறையைச் (organised sector) சேர்ந்த தொழிலாளர்களே அநேகருடைய கவனத்தையும் ஈர்ப்பதுடன், 'தொழிலாளர்கள்' என இனங்காணவும் படுகிறார்கள்.

ஆசிய நாடுகளைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையான பெண் தொழிலாளர்கள் 'ஒழுங்குபடுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்தவர்கள். இந்தியாவைப் பொறுத்தவரையில் 89% ஆன பெண் தொழிலாளர்கள் 'ஒழுங்கு படுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். எனவே பெரும்பான்மையான பெண் தொழிலாளர்கள், 'தொழிலாளர்கள்' என இனங்காணப்படுவதில்லை. இதனால் எழும் பெரும் பிரச்சினைகளில் ஒன்று, தொழிற் சட்டங்கள் (labour laws) எவையும் இவர்களுக்கு நடைமுறையில் இல்லை. 'ஒழுங்கு படுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இது பொதுவான பிரச்சினையாக இருக்கின்ற போதும், பெண்களைப் பொறுத்தவரையில் அது மிகப் பெரும்பான்மையானோரைப் பாதிப்பதுடன், பெண்கள் என்ற ஒரே காரணத்தினால் அது அவர்களை அதிகம் பாதிக்கும் பிரச்சினையாக உள்ளது. உதாரணமாக, 'ஒழுங்கு படுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்த இழிவுக்கூலி மட்டம்' (minimum wages) சட்டரீதியில் நிர்ணயிக்கப் படாத போதிலும் ஆண்களைவிடப் பெண்களே இதனால் கூடுதலாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை சென்ற இதழில் (சரிநிகர் இதழ் 3) வெளிவந்த 'உழைப்பு, பெண்கள், கூலி,' என்ற கட்டுரையில் பார்த்தோம்.

'ஒழுங்குபடுத்தப்படாத' தொழிற்துறையைச் சேர்ந்த பெண்கள் எதிர்நோக்கும் மிகமுக்கிய பிரச்சினை குறைந்த கூலியாக இருப்பினும் அதனுடன் கூடவே இன்னும் பல பிரச்சினைகளை எதிர் கொள்கிறார்கள். அவற்றுள் சில வருமாறு :

வேலைக்கு போகும் பெண்களின் குழந்தைகளைப் பராமரிக்கக் கூடிய அமைப்புக்கள் இலாமை ஒரு பெரிய குறைபாடாக உள்ளது. குழந்தைப் பராமரிப்பகங்களை (creches) கிராமங்கள் தோறும் நிறுவுவதன் மூலம் இப்பெண்களின் சுமையை ஓரளவுக்கு குறைக்கலாம். இவ்வசதி இல்லாததன் காரணமாக சில வறிய குடும்பங்களில் சிறிய பெண்பிள்ளைகள் தமது தம்பி தங்கையரைப் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இது அவர்களது கல்வியைப் பாதிக்கக் கூடிய அளவிற்குக் கூட பாரதூரமாக அமைகிறது. இதனால் பாதிக்கப்படுவது பெண் பிள்ளைகளே. பெண்கள் பிரச்சினையானது நச்சு வட்டமாக மீண்டும் மீண்டும் பெண்களைப் பாதிப்பதற்கு இது ஒரு சிறு உதாரணமாகும்.



இப்பெண்கள் வெளியில் வேலை பார்ப்பதால் அவர்களது வீட்டுக் கடமைகள் குறைவதாக இல்லை. வெளியில் வேலை செய்வதுடன் கூடவே பெரும்பான்மையான வீட்டு வேலைகளையும் (சமையல், துவைத்தல், குழந்தைகளைப் பராமரித்தல் போன்றன) இவர்களே தொடர்ந்து செய்ய நேர்கிறது. இதனையே சுருக்கமாக 'இரட்டைச் சுமை' (double burden) என அழைப்பர். மத்தியதர உயர்தர வர்க்கப் பெண்களைப் போலன்றி இப்பெண்களுக்கு வீட்டுப் பணிப்பெண்களை வைத்திருக்கும் அளவிற்கு பொருளாதார வசதியும் கிடையாது.

சிறிய வேலைத்தளங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அத்துடன் நீண்ட நேரங்களும் வேலையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மேலும் தொழிற்சட்டங்கள் நடைமுறையில் இல்லாததால் சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறை எவையும் இவர்களுக்கு கிடைப்பதில்லை.

மேற்கூறிய பிரச்சினைகள் தொழில் நிபந்தனைகள், நிலைமைகளுடன் மட்டும் தொடர்புபடாது குடும்ப அமைப்பு, ஆண் பெண் உறவுகள், சமூகப் பெறுமானங்கள் (social values) ஆகியவற்றுடனும் நெருங்கிய தொடர்பு உடையன.

மேற்கூறிய பிரச்சினைகளை தீர்க்க என்னும் அமைப்புக்களும் அரசாங்கங்களும் முதலிலே மேற்கூறிய பெண்களைத் 'தொழிலாளர்களாக' இனங்கான வேண்டும். இவ்வாறு இனங்காணப்படும் வரை அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் சமூக ரீதியான நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக மேற் கொள்ள முடியாது.

இன்று பெண்நிலைவாத அமைப்புக்கள் எதிர்நோக்கும் சவால்களில் ஒன்று மேற்கூறிய பெண்களை அமைப்பு ரீதியாக ஒருங்கிணைத்தல் ஆகும். இது ஒரு இயலாத காரியம் இல்லை. இந்தியாவின் பெரும் நகரங்கள் சிலவற்றின் சில பகுதிகளில் வீட்டுப் பணிப்பெண்கள் யாவரையும் ஒரு அமைப்பின் கீழ் கொண்டு வருவதில் பெண்கள் அமைப்புக்கள் ஓரளவு வெற்றி யீட்டியுள்ளன. அதே போல, பங்களாதேஷிலும், சில கிராமங்களில் உள்ள கூலி விவசாயப் பெண்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்குரிய 'இழிவுக் கூலியை' நிர்ணயிப்பதில் பெண்கள் அமைப்புக்கள் வெற்றி கண்டுள்ளன.

இப் பெண்களை அணி திரட்டிப் போராட வைப்பது பெண்விடுதலையை மட்டுமன்றி, சமூக மாற்றத்தையும் விரைவு படுத்தும் என்பதில் ஐயமில்லை.

## நிர்மலா பாலரத்னம் : ஒரு மனிதாபிமானியின் மறைவு -



மனித உரிமை இயக்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் ஆகியவற்றில் ஈடுபாடுடையவரும் சமூக சேவகியுமான நிர்மலா பாலரத்தினம் அவர்கள் கடந்த ஒக்டோபர் 8ஆம் திகதியன்று கொழும்பில் காலமானார். அவரது ஈடுபாடுகள், செயல்திறன் ஆகியவை மூலம் அவரை அறிந்தவர்களிடையேயும் அவருடன் சேர்ந்து உழைத்தோரிடையேயும் அவரது மரணம் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது.

நிர்மலா, சாதாரணமாக எமது சமூகத்தில் ஒரு பெண் தனது வாழ்வை அமைத்துக் கொள்கின்ற மரபு ரீதியான, குறுகிய முறையிலன்றி பரந்த சமூக உணர்வை வெளிப்படுத்தும் வகையில் வாழ்ந்தவர். தனது குடும்ப வட்டத்துள் மாத்திரம் குறுகி விடாமல் தனது சமூகம், அதனது நலன், வளர்ச்சி, பொதுவான மனித குல முன்னேற்றம் என்பவற்றில் அக்கறை கொண்டிருந்தார். அதற்காக உழைத்தார்.

நிர்மலா, தனது இளமைக காலம் முதற் கொண்டு இடதுசாரி, அரசியற் கருத்துக்களைக் கொண்டிருந்தவர். அவரது தந்தையார் சிற்றம்பலத்தின் அரசியல் ஈடுபாடுகள் நிர்மலாவின் ஆர்வங்களுக்குப் பின்னணியாக அமைந்தன. எனினும் நிர்மலா சிறுபராயத்திலேயே தந்தையை இழந்த போதும் அவரது ஈடுபாடுகள் குன்றவில்லை.

1983 ஆம் ஆண்டு வரை கொழும்பில் வாழ்ந்த நிர்மலா, தொழிற்சங்க நடவடிக்கைகளில் அதிகம் பங்கு கொண்டிருந்தார். சமூகத்தின் அடிமட்டத்தில் அல்லலுறும் மக்களது வாழ்க்கையில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தவல்ல அரசியல் தத்துவமும் நடைமுறையும் மார்க்ஸிஸம் என்ற கருத்தைக கொண்டிருந்தவர்.

1983 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தனது இல்லத்தை அமைத்துக் கொண்டதன் பின்னர் அவரது செயற்பாடுகள் மிகுந்த வேகம் பெற்றன. இக்காலப்பகுதி இலங்கையின் வரலாற்றில் மிகுந்த சிக்கலும் நெருக்கடியும் நிறைந்ததாகும். சிங்கள தமிழ் இனங்களுக்கிடையே பகைமை அதிகரித்தது மாத்திரமின்றி தமிழ் மக்களுக்கு எதிரான பாரபட்சங்களும் ராணுவ வன்முறைகளும் அதிகரித்தன. பிரிவினை கோரும் இயக்கங்களை ஒழித்தல் என்ற வகையில் பொதுமக்கள் இந்த வன்முறைகளுக்கு உள்ளாகினர். இத்தகைய நிலைமையின் உச்சவடிவமாக அமைந்ததுதான் 1984 ஒகஸ்ட் மாதம் வல்வெட்டித்துறையில் நிகழ்ந்த கைதுகள். ஒரே நாளில் சுமார் 300 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு எங்கோ கொண்டு செல்லப்பட்டனர். அதிர்ச்சியையும், பீதியையும் ஏற்படுத்திய இந்நிகழ்ச்சியைக் கண்டிக்க வழியின்றி திகைத்தபோது நிர்மலாவும் இன்னும் ஓரிரு பெண்களும் முன்வந்து நிறுவியதுதான் அன்னையர் முன்னணி என்ற அமைப்பு. கைது செய்யப் படுகின்ற காணாமற் போகின்ற தமது புதல்வர்களை விடுதலை செய்யும்படி இந்த அமைப்பைச் சேர்ந்த பெண்கள் அரசாங்கத்தையும், இராணுவத்தைக் நிர்ப்பந்தித்தனர். இது மாத்திரமன்றி பலவகையான மனித உரிமை மீறல்களையும் கண்டித்தனர். எவ்விதமான கட்சி அரசியற் சார்பின்றி இராணுவ வன்செயல்களுக்கு எதிரான பரந்தளவிலான கண்டனத்தை அன்னையர் முன்னணி தெரிவித்தது.

1986 வரை இந்த அமைப்பின் செயலாளராகவும் நிர்மலா விளங்கினார். கடல் பாதுகாப்புச் சட்டத்தை யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள கடற்பகுதியில் அரசு பிரகடனம் செய்ததனால் இக்காலப் பகுதியில் கடற்தொழிற் கிராமங்களில் மக்கள் ஊதியத்தை இழந்தனர். உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டனர். இக்காலத்தில் கிராம மக்களிடையே நிர்மலா நிவாரண வேலைகளில் ஈடுபட்டார். இன்று போல அதிகளவு அரசு சார்பற்ற நிறுவனங்களின் சேவை இல்லாத அக் காலகட்டத்தில் இந்நிவாரண வேலைகள் பெறுமதி மிக்கவையாக விளங்கின.

இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகவும் நிர்மலா கடமையாற்றினார். இக்காலத்தில் பல்வேறு மனித உரிமை மீறல் பற்றிய விபரங்களை நிர்மலா பகிரங்கப் படுத்தினார். 1987 ஒக்டோபர் யுத்தத்தின் போது பலாத்காரத்திற்கும், கொலைக்கும் ஆளான பல பெண்களது விபரங்களைச் சேகரித்திருந்தார்

1988, 89களில் கடினமான நோய்க்கு உட்பட்ட காலத்திலும் அவரது மனித நேயமும், நாளுக்கு நாள் சீரழிந்து வரும் நிலைமையை மாற்ற வேண்டும் என்ற ஊக்கமும் ஓயவில்லை.

வளர்ந்து வரும் இனப பகைமை, சமூகம் இராணுவமயமாதல் ஆகியவை பற்றி கவலை கொண்டிருந்த நிர்மலா, இந்நிலைமைகள் நேர்மையான அரசியல் நோக்கு இருப்பின் தீர்க்கப்படக் கூடியவை என்ற கருத்துக் கொண்டிருந்தார். இலங்கையின் சகல இனமக்களும் கௌரவத்துடனும், உரிமையுடனும், சமாதானத்துடனும் வாழ வல்ல அரசியல்தீர்வே பிரச்சினைகளுக்கு முடிவு தர வல்லது என்று எண்ணினார். குறுகிய தேசியவாத அலையுள் அறிவு ஜீவிகள் உட்பட இலங்கையின் பல்வேறு மட்ட மக்களும் அள்ளுண்டு போகும் இக்காலகட்டத்தில் நேர்மையும் மனித கௌரவத்தில் சமூகநீதியிலும் [illegible] உணர்வும் [illegible] தாக்கத்தையும் மறைவு [illegible] ஏற்படுத்துகிறது. ஏக[illegible]லாவின் மரணமும் இத்தகையதே.

— மைத்ரி.

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்


# ஈழத்தின் தேசியத் தற்கொலை

வடக்கிலிருந்து பெரும் எண்ணிக்கையில் முஸ்லிம் மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். ஒக்ரோபர் மாதத்தின் கடைசி வாரம் வடக்கு கிழக்கு மக்களின் மனதில் அவர்களுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் இன்னுமொரு கறை படிந்த அத்தியாயமாக இருக்கப் போகிறது.

கொழும்புப் பத்திரிகைகளும், அரசாங்கத்தின் ஊதுகுழல் பத்திரிகைகளும் சொல்வதை நம்பாத 'சரிநிகர்' மன்னாரிலிருந்தும் சாவகச்சேரியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களையும் அண்மையில் அங்கிருந்து "புலம் பெயர்ந்த" தமிழ் மக்கள் சிலரையும் சந்தித்தது.

மன்னாரில் எருக்கலம்பிட்டி, கரிசல், தாராபுரம், பொற்கேணி போன்ற முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் இடங்களை விட்டு நவம்பர் 2ம் திகதிக்கு முன்னர் வெளியேறி விட வேண்டுமென விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதை நாம் உறுதிப் படுத்துகிறோம். ஏற்கெனவே சாவகச்சேரியிலிருந்து முஸ்லிம் மக்கள் விரட்டியடிக்கப்பட்டு விட்டார்கள். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பிரிவில் மட்டும் வறிய மற்றும் நடுத்தர வர்க்க முஸ்லிம் மக்களைவிட ஏனையோர் வெளியேறிவிட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

"தமிழ் ஈழத்தில் முஸ்லிம்களுக்கு இடமில்லை" என்பதுதான் விடுதலைப் புலிகள் தலைமைப்பீடத்தின் நிலைப்பாடு என்றால் போராட்டத்தின் அடிப்படை என்ன என்ற கேள்வி வடக்கு கிழக்கின் எல்லா மக்களிடமிருந்தும் ஆற்றாமையோடும் அவநம்பிக்கையோடும் எழுவது தவிர்க்க இயலாதது.

மன்னாரில் தமிழ் மக்களின் வேண்டுகோளையும், கெஞ்சுதல்களையும் மீறியே முஸ்லிம் மக்கள் உக்கிரமாக வெளியேற்றப்பட்டார்கள்.

ஒரு மக்கள் திரளை அரசியல் ரீதியாகவும் கருத்து ரீதியாகவும் வென்றெடுக்க முடியாத கையாலாகாத்தனத்தின் விளைவுதான் மக்கள் திரளை இவ்வாறு ஆயிரக் கணக்கில் ஆயுத முனையில் விரட்டியடிக்கிறது. பலஸ்தீனியர்களை இவ்வாறுதான் இஸ்ரேல் வெளியேற்றியது. ஆனால் பலஸ்தீனியரின் சுயநிர்ணய உரிமைப் போரை நசுக்க முடியவில்லை. இஸ்ரேலும் தன்னுடைய "பாதுகாப்பை" உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களை விரட்டியடிப்பது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கு ஒரு குறுக்கு வழி என்று யாராவது நினைத்தால் அதை விட மூடத்தனம் வேறு ஒன்றுமில்லை.

ஈழத்தின் தேசியத் தற்கொலையே இது! முஸ்லிம் மக்களை அடித்துத் துரத்தி விட்டு உருவாக்கப்படும் ஈழம் இஸ்ரேலாகத்தான் இருக்குமே தவிர ஈழமாக இருக்க முடியாது!

மட்டக்களப்பிலிருந்து சென்ற விடுதலைப் புலிப் படைப் பிரிவு ஒன்றுதான் மன்னாரிலிருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றப் பொறுப்பாக இருந்தது என்றும் மன்னார் பிரிவுப் புலிப்படைப் பிரிவின் தலையீட்டால் முஸ்லிம் மக்களின் உயிரழிவு தடுக்கப்பட்டது என்றும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கிறார்கள். எனினும் முஸ்லிம்களை விரட்டியடிப்பது புலிகளின் தலைமைப் பீடத்தின் உறுதியான முடிவு என்பதைச் சந்தேகிப்பதற்கு இதுவரை எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

அரசின் கருத்தை மேலும் பலப்படுத்துவதாகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் அதனுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ள முஸ்லிம் மக்களின் சுய நிர்ணய உரிமையையும் மழுங்கடிப்பதாகவுமே புலிகளின் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

இதனை எதிர்த்துக் குரலெழுப்ப முடியாத அளவுக்கு வடக்குக் கிழக்குச் சமூகம் (Civil Society) நலிவுற்றும், நெஞ்சில் சப்பாத்துக் காலும் தலையின் பின்புறம் துப்பாக்கி முனையும் தொடமிரண்டு போயும் உள்ளது ஒரு வரலாற்றுச் சோகம்!

விடுதலைப்புலிகளின் இந்த நடவடிக்கைக்கு வெறுமனே "பழிவாங்கல்தான்" காரணமா அல்லது அவர்களின் நீண்ட கால அரசியல் திட்டம்தான் காரணமா?

கடந்த சில மாதங்களாகத் தமிழ்நாட்டின் பல இடங்களில் (திண்டுக்கல், நாகூர், அம்பூர், சென்னை) முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட வன்முறைகள். இந்து வெறியர்களான RSS ஆலும் ஹிந்து முன்னணியாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்து தர்மத்தைப் பேணும்படியும் இந்துவாக வாழும்படியும் கோரும் தீவிர சுவரொட்டிப் பிரசாரமும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டின் திராவிடப் பாரம்பரியம்; பெரியார் வழி எப்போதும் மதவெறிக்கும் மதச் சார்பிற்கும் எதிராகவே இருந்து வந்துள்ளது. மேலும், பாரதீய ஜனதா கட்சியும் அதன் வெறிநாய்க் கூட்டமான RSS.

விஷ்வ ஹிந்து பர்ஷத் (இதற்கு கொழும்பிலும் ஒரு வால் உண்டு), ஹிந்து முன்னணி போன்றவையும் ஹிந்தி-ஹிந்து என்ற கோஷத்தை வலியுறுத்துபவை. ஹிந்தித் திணிப்பை எப்போதுமே எதிர்க்கும் தமிழ்நாட்டில் எவ்வாறு இந்து மத வெறி ஊடுருவ முடியும் என்பது தமிழ்நாட்டின் மத சார்பற்ற (Secular) பின்னணியில் வைத்து நோக்கும் போது புதிராகத்தான் இருக்கிறது.

எனினும் முஸ்லிம்களுக்கெதிராக உணர்வையும் வன்முறையையும் திட்டமிட்டு வளர்க்க ஒரு கும்பல் இப்போது தமிழ் நாட்டில் உருவாகி விட்டது என்று தோன்றுகிறது. முதல்வர் கருணாநிதி கூட முஸ்லிம்களுக்கு எதிரான அண்மைய சம்பவங்களின் போது "மெத்தனமாகவே" நடந்து கொண்டார் என்று குற்றம் சாட்டப்படுகிறது.

விடுதலைப் புலிகளும், வேறு தமிழ்த் தேசியவாத சக்திகளும், கற்பனைவாத ஆரிய-திராவிட மாயைகளுக்கும், தீவிரவாத இந்து வெறித்தனத்துக்கும் குறுகிய கால நலன்களுக்காகப் பலியாகின்ற அபாயம் இருக்கிறது.


பிரெஞ்சு புரட்சியின் பிதாமகனான றொபியேஸ் பியர் ஒரு முறை சொன்னான் தோல்வியைத் தழுவுவதை விட, அநியாயமான தவறுகளை அடிக்கடி இழைப்பது பரவாயில்லை" என்று. ஆனால், அநியாயமான தவறுகளை அடிக்கடி இழைப்பது தோல்வியைத் தடுக்கலாம். வெற்றியை ஒரு போதும் கொண்டு வராது. மற்றவர்களுடைய சுதந்திரத்தை அங்கீகரிப்பதில்தான் எங்களுடைய சுதந்திரத்திற்கு ஒரு அர்த்தப்பாடு இருக்க முடியும்.

இந்த நிலையில் வடக்குக் கிழக்கிற்கு வெளியே உள்ள தமிழ் மக்களும், புலம் பெயர்ந்தவர்களும் முஸ்லிம் மக்களின் உரிமைக்காகவும் அவர்களுடைய பாரம்பரியப் பிரதேசங்களில் அவர்களை வாழ வைக்கவும் குரலெழுப்புவது மட்டுமன்றி தமிழ்த் தேசிய வாதத்தில் நோய்க்கூறாகப் பரவி வரும் முஸ்லிம் எதிர்ப்பையும் ஆக்ரோஷமாக எதிர்க்க வேண்டும்.

இது ஒன்றுதான் தமிழ் மக்களை நீண்ட காலக் கண்ணோட்டத்தில் அனைத்து ஒடுக்கு முறைகளிலிருந்தும் விடுவிக்கும்.



## துகழர்த்தி எங்கே?



றெஜி சிறிவர்தன

ஜனரஞ்சக அபிமானமற்ற அல்லது அடக்கு முறையில் அரசின் முகவர்களாக விளங்கியவர்களைக் கொலை செய்துவிட்டு அவர்களுக்கு விதித்த கொலைத் தண்டனை அவர்கள் கடந்த காலத்தில் இழைத்த கொடுஞ்செயல்களுக்கு பரிகாரமாயமைந்தவை என்று கூறலாம். அதனால் அவர்களுக்காக எவரும் கண்ணீர் வடியாமலும் இருக்கலாம். ஆனால் இத்தகைய தூய்மையிழந்த பாசிபடர்ந்த மார்க்கத்தில் பயிலத் தொடங்கிவிட்டால் அது நிறுத்தமுடியாத தொடர்கதை நிகழ்வாக அமையும். பொலிசுக்கு தகவல் கொடுப்பவரை ஒழிக்க முற்படுவீர்கள். அது தக்க செயலே என்று நியாயப்படுத்துவீர்கள். ஆனால் அவ்வளவோடு நிறுத்திக் கொள்ள மாட்டீர்கள். ஏனென்றால் விடுதலையென்ற புனித குறிக்கோளை எய்த நின்ற மார்க்கத்தில் குந்தகமாக நிற்பவர்களைக் கொலை செய்வது நியாயமே என ஏலவே நம்பிக்கை கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு விடுதலை அடையப் பெறுவதற்கான சரியான உபாயம் உங்களிடத்தும் உங்கள் குழுவிடத்தும் மட்டுமே உண்டென்பது பற்றியும் உறுதியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருபோதும் தவறிழைக்கமாட்டீர்கள் என்ற உமது பூரணமான உறுதிபடைத்த நம்பிக்கையும் நீங்கள் பின்பற்றும் மார்க்கத்தின் இரக்கவுணர்வற்ற பாங்கும் இணைந்த நிலை வெகுபயங்கரமானது. இத்தகைய தார்க்கிக நியாயத்தை அரணாகக் கொண்டு உங்களைப் போன்று தாமும் அதே இலட்சியத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் (ஆனால் உங்கள் கருத்துப்படி) தவறான மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற கட்சியினரை அல்லது குழுவினரையும் கொலை செய்யப் புகுவீர்கள். ஆனால் அவ்வளவோடு அமைய மாட்டீர்கள். உங்கள் தர்க்க நியாயப்படி, உங்கள் குழுவினருக்குள்ளேயே உங்களோடு மாறுபடுபவர்களை துரோகிகளாகக் கருதி அவர்களையும் ஒழிக்க முனைவீர்கள். இன்னும் இந் நடைமுறைப் பாங்கானது விரும்பிய அதிகாரம் கைப்பற்றப்பட்டவுடன் ஓய்ந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. அது வகுத்துச் செல்லும் பாதையானது சித்திரவதைக் கூடங்கள், ஓயாத ஒழித்துக்கட்டல்கள், கொலை முகாம்கள் மலிந்த சமுதாயத்துக்கே இட்டுச் செல்வதாகும்.

— றெஜி சிறிவர்தன -

வன்முறையும் மனித உரிமைகளும் எனும் தலைப்பில் றெஜி சிறிவர்தன ஆற்றிய அமரர் கந்தசாமி நினைவுப் பேருரை இந்த இதழ் சரிநிகருடன் இலவசமாக இணைக்கப்பட்டுள்ளது.

சரிநிகர் மாத இதழ், 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம், (MIRJE) சார்பில் உ. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 7.11.90.